

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

AUG 1925

உள்ளுறை

சோமசுந்தரர் சிங்கப்பலகை தந்தது
திருநாவுக்கரசு சுவாமிகள்
தேவாரம் உரை ளசஎ
மணிவாசகரும் கண்ணப்பரும் ளசக
பண்டைத் தமிழ் [illegible] [illegible]
சொக்கநாதர் [illegible]
நாயகரும் ளகூ
ஆய்தம் ளசுசு
கருமை ளஎக
இலக்கண நூற்பயிற்சி ளஎகூ
இளஞ்சேய்க்கொல்லி ளஎகூ
திருவாசக வாக்கியங்கள் ளஅக
சிவஞானபோதக் கருத்து ளகூச



...e South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 பிரசோற்பத்தி௵ சித்திரைமீ தனிப் பரல் அணா 5

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**(Editorial Board Members)**

தலைவர்

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M. A., M. L.,
*அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்.*

---

2. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் கலாசாலை, திருச்சி.*

3. ,, துடிசைக்கிழார். சிதம்பரனாரவர்கள்,
*போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நாமக்கல்.*

4. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
*பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.*

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
*மகிபாலன்பட்டி.*

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
*வழக்கறிஞர், சாத்தூர்.*

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

8. ,, பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
*அமைச்சர், தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.*

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
*தமிழாசிரியர், லாலுகுடி.*


---


### பிரசோற்பத்தி வருட

# சைவப் பஞ்சாங்கம்

### வெளிவந்து விட்டது

கிளேஸ் பிரதி விலை அணா 2. ரப் அணா 1½

குறிப்பு:—1. தனிப்பிரதி வேண்டுவோர் 1-அணா தபாற்றலையுஞ் சேர்த்தனுப்புதல் வேண்டும்.

2. வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

| சிலம்பு ௯ | மெய்கண்டான்யாண்டு-௭௱௮ சித்திரைத் திங்கள் 1931௵ ஏப்பிரல்௴—மே௴ | பரல் ௪ |
|---|---|---|

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

விளைக்கின்ற வினையை நோக்கி வெண்மயிர் விரவிமேலும்
முளைக்கின்ற வினையைப்போக முயல்கிலேனியல வெள்ளம்
திளைக்கின்ற முடியினான்றன் திருவடி பரவமாட்டா
திளைக்கின்றே னிருமியூன்றி யென்செய்வான் தோன்றினேனே.

*விளைக்கின்ற வினையை நோக்கி*=முற்பிறவிகளில் நான் செய்து இப் பிறவியில் பயனாய் வந்து எனக்குத் துன்பத்தை உண்டாக்குகின்ற நுகர் வினையின் (பிராரத்த வினையின்) பயனை உள்ளத்தில் நினைந்து பார்த்து

*வெண் மயிர் விரவி*=அச்சத்தாலும் கவலையாலும் என் உடலிலுள்ள மயிர் நரைத்து வெண்ணிறமாகிப் பழைய கருமயிருடன் கலந்திருத்தலை உடையவனாகின்றேனே அல்லாமல்

*மேலும்*=இனிவரும் பிறவிகளில்

*முளைக்கின்ற வினையை*=இப்பிறவியில் பலனாக உண்டாகி நான் செய்கின்ற வருவினையில் (ஆகாமிய வினையில்) இனிவரும் பிறவியில் துன்பம் நுகர்தற்குக் காரணமாயுள்ள தீவினையை

இயல—இயன்றவாறு

போதா முயல்கிலேன்=செய்யாமலிருக்க முயற்சி செய்கின்றேனில்லை

வெள்ளந் திளைக்கின்ற முடியினன்=கங்கை ஆற்றின் வெள்ளம் தங்கு தலையுடைய சடை முடியை உடைய சிவபெருமானுடைய

திருவடி பரவமாட்டாது=அருளாகிய இரண்டு அடிகளையும் துதியாமல்

ஊன்றி இருமி இளைக்கின்றேன்=(இருமுதலுக்கும் வலியின்றி) ஒன்றனைச் சார்ந்து இருமிக்கொண்டு உடல் மெலிந்து போகின்றேன்

என் செய்வான்=(அப்பேர்ப்பட்ட நிலைமையை உடைய நான்) உலகில் என்ன கருமம் செய்யும் பொருட்டு

தோன்றினேன்=பிறந்துள்ளேன் (நான் எடுத்துள்ள பிறவியினால் யாதொரு பயனுமில்லை என்றபடி)

தன், ஏ இரண்டும் அசை நிலைகள்.

வினை என்பது இங்கே ஆகுபெயராய் வினையின் பயனைக் குறிக்கின்றது.

விளைக்கின்ற வினை=இப்பிறவியிற் பயனை உண்டாக்குகின்ற நுகர்வினை (பிராரத்தவினை)யின் பயன்

முளைக்கின்ற வினை=இனிப்பயன் தருதற்கு இப்பிறவியில் உண்டாகின்ற வருவினை (ஆகாமிய வினை)

ஒரு மரத்தின் விதையானது பின் மரமாயுண்டாதற்குக் காரணமாயிருத்தல்போல முன் செய்த நுகர்வினையானது (பிராரத்த வினையானது) இப்பிறவியில் நுகரும் துன்பத்துக்குக் காரணமாய் உண்டாகின்றது என்னும் கருத்தை முளைக்கின்ற என்றசொல் உணர்த்துகின்றது.

வெண்மயிர் விரவுதல்=அச்சத்தாலும் கவலையாலும் கருமயிரானது நரைமயிராதலைக் குறிக்கின்றது. விரவுதல் - கலத்தல். மயிர் பல நரைத்துச் சில பழைய கருமயிருடன் கலந்திருத்தல்.

உன்றன் திருவடி பரவமாட்டா திளைக்கின்றேன்=என்பது அருளைச் சார்ந்து தான் தீவினையை விலக்கி நல்வினையைச் செய்யமுடியும் என்பதைக் குறிக்கிறது. அடிகள் "திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" என்று கூறியிருத்தல் காண்க.



பொதுவாக உலகிலுள்ள பெரும்பான்மை மக்கள் செயலை நாம் பார்க்குங்கால் அவர்கள் இப்பிறவியில் ஒருபுறம் நுகர்வினையின் (பிராரத்த வினையின்) பயனாகத் துன்பம் நுகர்ந்து கொண்டும் முற்பிறவியின் பயன் இப்பிறவியில் நுகர்தல்போல இப்பிறவியில் செய்யப்படும் வருவினையின் (ஆகாமிய வினையின்) பயன் இனிவரும் பிறவியில் நுகர்தல் வேண்டும் என்னும் உண்மையை அறிந்து உணராது மற்றொரு புறத்தில் தீவினையைச் செய்துகொண்டும் வருகின்றார்கள். "இருமலுஞ் சோகையு மீளையும் வெப்பும்—தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்" என்று திருமூலர் கூறியபடி, மக்களிற் சிலர் இருமல் முதலிய நோய்களினாலும் வருந்துகின்றார்கள். இருமல் நோயுள்ள சிலர் இருமுதற்குக்கூட உடல்வலியின்றி இளைத்திருக்கின்றார்கள். அவ்வாறு வருந்திக் கொண்டிருக்குங் காலையிலும் அவர்கள் இறைவனது திருவருளை நினைந்து தீவினையை விலக்கி நல்வினையைச் செய்து இவ்வுலக வாழ்வின் பயனை அடைய முயல்கின்றார்களில்லை. அப்பேர்ப்பட்ட பிறவி வாழ்க்கையினாற் பயன் ஒன்றும் இல்லாமற் போகிறதே என்று அவர்கள் நிலையை நோக்கி வருந்தியும் இரக்கமுற்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் அதனைத் தமது நிலையாகக் கருதி இத்தேவாரப் பாட்டைப்பாடி அருளினார்கள். இத்தேவாரப்பாவின் கருத்தை அறிந்து சைவமக்களும் பிறமக்களும் திருவருளை நினைந்து உலகில் எவ்வாற்றானுந் துன்பம் தருகின்ற தீவினையை நீக்கி எவ்வாற்றானும் இன்பம் தருகின்ற நல்வினையைச் செய்து உய்வார்களாக.

மா. வே. நெல்லையப்பிள்ளை.

---

# மணிவாசகரும் கண்ணப்பரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்]

(சிலம்பு - ௯. பரல் - ௩. ௱௯-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, பெரியோர்கள் இயற்றியருளிய சாத்திரமும் தோத்திரமுமாகிய நூல்களை ஆராய்ந்துபார்க்கின் அவற்றின்கண் பெரும்பாலும் அவர்களின் வாழ்க்கையினது தோல்வி காணப்படுவதன்றி வெற்றி குறித்த செய்தி காணப்படுவது அரிதினும் அரிதாகும். அங்ஙனம் அருகிக் காணப்படுவதும் அவர்களை யறியாது போந்ததோருண்மையாகும். தோல்விச் செய்தி

நிறைந்து காணப்படுதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, தம் தோல்வி அணுவாயினும் அதனை மலையினும் மாணப்பெரிதாக மதித்து வருந்தி ஆண்டவன் திருமுன்னர்க் கூறி முறையிடுதல்; மற்றொன்று, ஏனைய மக்களிடத்துக் காணப்படும் தீயசெயல்களைக் கண்டு வருந்தி அவற்றைத் தம்பாலேற்றிக் கூறி முறையிடுதல். எனவே, எவ்வகையானும் தங்கள் சிறுமையையும் தோல்வியையுமே அவர்கள் கூறுவார்களேயன்றி, பெருமையையும் வெற்றியையும் கூறார்கள். பின்னுள்ளவை அவர்கட்குத் தெரிவதுமில்லை. ஒரோவழித் தெரியினும் தாங்கள் கோலிவரையறுத்த எல்லைக்கு அவை அணுவினும் அணுவாகத் தோன்றும். தோன்றவே, அவைகளை அவர்கள் பொருளாகக் கொள்வதில்லை. ஆனால், பிறருக்கு அவை பெரியவற்றினும் பெரியவையேயாகும். ஆதலினாற்றான் அங்ஙனங் கருதிய பிறர், தம்மைப் புகழும்போது "இல்ல புகழ்தலின் வைதலே நன்று" என்னுங் கருத்துடையாராய் அப்புகழ்ச்சியை நஞ்சினுங் கொடியதாக அவர் நினைப்பதூஉ மென்க. என்னை? அப்பெருமையும் வெற்றியும் தம்மிடத்து இல்லையென்பது அவர் கருத்தாகலின்.

இனி, அணுவினும் சிறிதாகிய தீமையை மலையினும் பெரிதாகக் கருதலால் பிறர் இகழும் இகழ்ச்சியை அவர் பெரிதும் விரும்புகின்றனர். என்னை? தமக்குச் செருக்கு அரும்பாதிருத்தற்கும் தம் தீமையைப் போக்குதற்கும் அஃது துணையாகும் என்பதூஉம் அவர் கருத்தாகலின் என்க.

> "நாணது வொழிந்து நாடவர் பழித்துரை,
> பூணது வாகக் கோணுத லின்றி"

> "உத்தமனத் தனுடையா னடியே நினைந்துருகி
> மத்தமனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
> ஒத்தனவொத்தன சொல்லிட ஆரூர் திரிந்தெவரும்
> தத்தமனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே"

என்னும் அடிகள் திருவாக்கு, அவர் பிறரிகழ்ச்சியை எத்துணை விருப்புடன் வரவேற்று நின்றாரென்பதை நன்கு விளக்குதல் காண்க.



இவ்வேண்டுகோள் கைவரப்பெற்ற நமது அடிகள், தம்மை நாட்டிலுள்ள பலரும் "அமைச்சியற் பதவியை யிழந்து ஓர் கோவணாண்டியாகத் திரிகின்றானிப்பித்தன்" என்று எள்ளி நகையாடுதலையும், அவர்களைத் தாம் "உலக வின்பத்தை நிலைபேறுடையதெனக் கருதிக் களியாட்டயர்கின்ற பித்தர் இவர்" என அங்ஙனம் செய்தலையும், "நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப நாமுமவர்தம்மை யார்ப்ப வார்ப்ப" என்பதனாற் குறிப்பித்தருளினர். பின், அந்நிலை கடந்து மக்கள் பலர், தம்மைப் "பித்தன்" என்று அஞ்சுதலைக்கண்ட நமது அடிகள் உயிர்கள் மாட்டுச் சிறிது அஞ்சுதலையும் செய்யாக் கழிபேரிரக்கமுடையவராதலின் இறைவனை நோக்கி,

> "மருளார் மனத்தோ ருன்மத்தன்
> வருமாலென்றிங் கெனைக்கண்டார்
> வெருளா வண்ணம் மெய்யன்பை
> உடையாய் பெறநான் வேண்டுமே"

எனக் குறையிரந்து வேண்டினமையுங் காண்க.

மேற்காட்டியவைகள் இஞ்ஞான்றுள்ள திருவாசகப் பதிப்புக்களில் முறையாகக் காணப்படுதலும் கருதத் தக்கது.

பெரியோரின் இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது, தான் "எவ்வித நலனும் உடையவனல்லன்" என்றும், "எல்லாவுயிரினும் கடைப்பட்டவ" னென்றும் கருதுவதாகும். இக்கருத்து இறப்பு, நிகழ்வு, எதிர் வென்னும் கால மூன்றினும் முறையே இருந்த, இருக்கின்ற, இருக்கும் பெரியாரனைவர்க்கும் ஒத்ததாகும்.

உலகத்தின்கண் பெரும் பகுதியாராற் போற்றப்படுகின்ற நிகழ்காலப் பெரியாராகிய மகாத்மா காந்தி யடிகள் "தாங்கள் மெய்யாகவே மகாத்மாவா? அப்படியானால் மகாத்மா என்ற சொல்லை விளக்குக', எனச் சிலர் கேட்ட வினாவுக்கு விடையாகக் கூறியதாவது:—

"அத்தகைய ஒருவனையிருக்கச் சிந்திப்பதில்லை; ஆனால் கடவுள் படைப்புக்கு உட்பட்ட உயிர்களுள் மிகத் தாழ்ந்தவன்

யான் என்பது எனக்குத் தெரியும். அச்சேர்க்கை பெறாத யான் அச்சொல்லை விளக்கவல்லே னல்லன்" என்பது.

இன்னும் அப்பெரியார் "சத்திய சோதனை"யின் முன்னுரையில் அருளிய பொன்மொழிகளுட் சில:—

"சத்தியப் பயிற்சியில் அருமை, எளிமை என்னும் இரண்டும் உண்டு. அப்பயிற்சி செருக்கில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவற்கு அரியது. ஒன்று மறியா இளங்குழந்தைக்கு அஃது எளியது. சத்தியநெறியிற் புகுவோன் தூசியினும் தாழ்மை பெறவேண்டும். உலகோர் தூசியைத் தம் அடிக்கீழ் மிதிக்கின்றார்; சத்தியத்தை நாடுவோன் அத்தூசியால் மிதியுண்ண வேண்டும். அதன் பின்னர்—முன்னரன்று—அவன் உண்மை யொளி சிறிது காணக்கூடும்."

"என்னை யானே அளந்து ஆராயும்போது சுருதாஸ் என்னும் அன்பர் பாடியவாறு, 'என்னைப்போன்ற கொடும்பாவி, வெறுக்கத்தக்கவன் யார்? என்னைப் படைத்த ஆண்டவனைக் கைவிட்டு விட்டேன். அவ்வளவு நன்றி கெட்டவனானேன்,' என்று ஓலமிடவேண்டும்" என்பன.

இன்னும் அவர் "சத்திய சோதனை"யின் முடிவுரையில் "நான் என்னைத் திரணத்தினும் தாழ்மையுள்ளவனாக்கிக் கொள்ளவேண்டும். ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்தினால் தன்னைத் தன் சகோதர உயிர்ப்பிராணிகளுக்கெல்லாம் கடையானவனாகக் கருதாத வரையில் அவனுக்கு மோக்ஷம் கிடையாது," எனப் புகன்றருளுகின்றார்.

இவ்வறமொழிகளை நினைவிற் பதித்துக்கொண்டு கீழ் வரூஉம் திருவாசகங்களை அன்பர்கள் கூர்ந்து நோக்குவாராக. அவை,

"யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை."



"ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்தியான் யாவரினுங் கடையனாய
நாயினே னாதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்பனென்பேன்"

"யாரினுங் கடையனாயினேன் போற்றி"
"கடையேனடிமை கண்டாய் போற்றி"
"நான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான, நீசனேன்"
"பாவியேனைப் பணிகொண்டாய்"
"நான் பாவியனானாலுனை நல்கா யெனலாமே"
"நாயிற்கடையாம் நாயேன்"

என்பன.

இன்னும் திருவாசகத்தை வடித்து வடித்துப் பார்ப்பினும் பெரும் பகுதி அடிகள் தமது தாழ்மையைப்பற்றியும் இறைவனது மேன்மையைப்பற்றியும் கூறியனவாகவே காணப்படும். இத்தாழ்வுதான் சைவ சமயத்தின் உயிர் நாடி என்பதை, "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும், ஊழ் பெறலரிது" என்னும் சித்தியாரால் அறிக. "வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பி"யதை,

"செல்வமென்னு மல்லலிற் பிழைத்தும்
நல்குரவென்னுந் தொல்விடம் பிழைத்தும்"

என்பதனாலும், "தாழ்வு" என்பதற்கு எல்லாவுயிரினும் தன்னை ஓர் கடையவனாகக் கருதல் (முனைப்பின்றியிருத்தல்) என்னும் பொருளை மேற்காட்டிய தொடர்களாலும் அடிகள் விளக்கி யருளினமை காண்க.

அங்ஙனம் அவர் கூறினும் பிறருக்குத் தாம் 'அடிமை' என்பது கருத்தன்று; அஃது தமக்கு முனைப்பு அரும்பாமலிருத்தற்கு மேற்கொண்டொழுகும் நெறிகளில் ஒன்றாகும். தாம் எஞ்ஞான்றும் "தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கர"னுக்கே மீளா அடிமை யென்பதும் பிறருக்கு அடிமையன்று என்பதும் அவர் கருத்தென்க. அக்கருத்தில் உறைத்து நிற்பது பெரியார்கள் இயல்பாதலின் அவர்கள் அவ்வாண்டவ

னுக்கு அஞ்சுவார்களே யன்றிப் பிறருக்கு அஞ்சுமியல்பு எஞ்ஞான்றும் யாண்டுமில்லை; இவ்வுண்மையை,

> "யாவர்கோ னென்னையும் வந்தாண்டு கொண்டான்
> யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்"

என்னும் திருவாசகமும் வலியுறுத்தல் காண்க. இதனோடு,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்னுந் திருநாவுக்கரசுகளின் செம்மொழியையும், "உலகத்தில் எவர்க்கும் அஞ்சேன்; கடவுள் ஒருவருக்கே அஞ்சுவேன். கடவுளுக்கு அஞ்சி நடப்போமாக; மனிதனுக்கு அஞ்சி நடப்பதை ஒழிப்போமாக; நமது உள்ளத்திற் கடவுளிருப்பதையும், அவர் நாம் நினைத்தல் நிகழ்த்தலைக் கண்டுவருவதையும், அவர் நம்மை நேர்மையான வழியில் நடத்துவதையும் உணர்வோமானல், நாம் கடவுள் ஒருவர்க்கன்றி வேறு எதற்கும் அஞ்சுவதை ஒழிப்போம்" என்னும் மகாத்மாவின் மணிமொழிகளையும் ஒப்பிட்டு நோக்குக.

இன்னும் அப்பெரியாரது, "கடவுள் கணிதத்தில் நமது செயல்கள் குறிக்கப்படுகின்றன" என்னும் உண்மை மொழி,

> "தொழுது தூமலர் தூவித் துதித்து நின்(று)
> அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
> பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே"

என்னும் ஆளுடைய அரசினது அருண்மொழியுடனும், "கடவுளிடத்திலும் அவரது வல்லமையிடத்திலும் அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதிஅசைக்க முடியாதது" என்னும் வீரமொழி,

> "இறக்கினுமின்றே யிறக்குக வென்று மிருக்கினு
> மிருக்குக வேந்தன்
> ஒறுக்கினு மொறுக்கவு வகையு முடனே யூட்டி
> னூட்டுக வானிற்
> சிறக்கினுஞ் சிறக்க கொடிய நீரகிற்சேரி
> னுஞ் சேருக சிவனை
> மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால் மாற்
> றுவார் யாரென மறுத்தார்"



என மணிவாசகனார் கூற்றாக வைத்துப் பரஞ்சோதியார் பகரும் மொழியும்,

"ஆராரெனக் கென்னபோதித்து மென்ன வென்னறிவினை மயக்க வசமோ" என்னும் தாயுமானப் பெருந்தகையாரின் தனிமொழியுமாகிய இவற்றுடனும் ஒத்து நிற்றல் நோக்கி உண்மை காண்க.

மேற்காட்டியவற்றாலும், காட்டப்படாது இவைபோலுள்ள பலவாலும் நாடு, மொழி, சமய முதலியவற்றால் வேறுபடாது பெரியார் பலரின் கருத்து ஒற்றுமைப்பட்டே நிற்குமென்பதை உய்த்துணர்க.

"ஆயின் ஒவ்வொரு பெரியாரினது வரலாறுகளையும் நோக்குங்கால் அவ்வவர் வாழ்க்கை நெறிகள் மாறுபட்டுக் காணப்படுகின்றனவே" எனின், அஃது அவ்வப்போதுள்ள காலம், இடம், நிகழ்ச்சிகளைப் பொறுத்ததொன்றென்க. என்னை? மக்கள் பாவைகள்போல அசைவற்றிருப்பவரல்லர்; ஆகலின் அவர்கள் காலந்தோறும் மாறுபாடுடையராதல் இயல்பு. அதற்கு மேற்காட்டிய காலமுதலியனவே காரணமாகும் என்க. எடுத்துக்காட்டாக, சில நூற்றாண்டுகட்கு முன்னர் நமது நாடு இருந்த நிலையும் இற்றை நாள் அஃது இருக்கின்ற நிலையும் அகக்கண்ணும் புறக்கண்ணும் கொண்டு நோக்குவோமானல் பெரிதும் வேற்றுமை தோன்றும்; முன்னர் ஒரு சிற்றூரிலிருந்து வாழ்க்கை நடத்துவோன் நகரவாழ்க்கையின் நன்மையையோ தீமையையோ அறியான். அஞ்ஞான்று கடல், காடு, மலை முதலியன ஒவ்வொரு நாட்டையும் பிரித்து ஒரு நாட்டார் பிறநாட்டாருடன் பழகாவாறு தடை செய்து நின்றன. இற்றை நாளிலோ நீராவி மரக்கலங்கள், வானவூர்திகள், புகைவண்டிகள் முதலியவற்றால் அவ்விடையூறு முற்றுந் தகர்க்கப்பட்டு உலக முழுதும் ஒன்றாக்கப்பட்டு விட்டது. அதனால் எல்லா நாட்டு மக்களுங் கலந்து பழகிவருகின்றனர். எனவே அந்நாளிலுள்ள மக்களின் அறிவியக்கத்திற்கும், பொருளாதார நிலைக்கும், பிறவற்றிற்கும் இற்றை நாளிலுள்ள அவற்றிற்கும் இடையீடு சாலவும் பெரிதாகுமன்றே! அவ்வாறாகவே,

உயிர்களிடத்து வைத்த இரக்கமே உருவாகக்கொண்டு தமக்கென வாழாத் தன்மையாளராகிய பெரியார் பலரும் தாம் வாழ்ந்த காலத்து மக்களிடம் என்ன குறைபாடு காணப்படுகிறதோ அதை நீக்குதற்குரிய நெறியையே மேற்கொண்டு அதற்கு ஆவனவற்றையே அவர்க்கு அறிவுறுத்தி வாழ்க்கை நடாத்தியிருப்பார் எனக் கோடலே முறையாகும்.

உறுபசியும் ஓவாப்பிணியுமின்றி, நாடு செழித்துக் குடிகொழுத்துள்ள அஞ்ஞான்று, "நெருநல் அவ்வின்பத்தை நுகர்ந்தோம்; இன்று இந்நலனைத் துய்க்கின்றோம்; நாளை அதனை நுகர்ந்து மகிழ்ச்சியடைவோம்" என மக்கள் வாழ்க்கையின்பத்தையே எண்ணிக் கடவுள் நினைவு அரும்பாதிருந்திருப்பர்; அது காலை,

"இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே!"

என ஆளுடைய பிள்ளையார் அறிவுறுத்தருளினர். இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவுமின்றிப் பல கோடி மக்கள் பரிதவிக்கும் இஞ்ஞான்று ஒரு பெரியார் அது போன்ற நன்மொழிகளை மக்களுக்குக் கூறின் அவை, 'செவிடன் காதிற் சங்கூதுவ'தை ஒக்குமன்றிப் பயன் தரா; ஆகலின் இற்றை நாட்டுப்பெரியார் மக்களின் வறுமை நோயைக் களைவதிலேயே முன்னணியாக நின்று தொண்டாற்றுவரென்க. எனினும் அப்பெரியாரனைவரின் குறிக்கோள்மட்டும் ஒன்றேதான் என்பதை அறிஞரனைவரும் மறுக்கார்.

(தொடரும்)



# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

ஒருவன்—(கரு)

கடவுளைக் குறிக்கப் பண்டைத் தமிழர்கள் வழங்கி வந்த சொற்களில் ஒருவன் என்ற சொல் ஒன்று. ஒருத்தன் என்ற சொல்லும், ஒன்று என்ற எண்ணுப் பெயரும் கடவுளைக் குறிக்க வழங்கப்பட்டு வந்த சொற்களாகும். ஒருவன் என்றும் ஒருத்தன் என்றும் ஒன்று என்றும் அவைகளாற் குறிக்கப்படும் கருத்துக்களில் வேறுபாடு ஒன்றுமில்லை. இச்சொற்களால் குறிக்கப்படும் கருத்துக்களை இக் கட்டுரையில் இயன்றவாறு கருதுவாம்.

2. ஒருவன் என்ற சொல்லானது ஒன்று என்ற எண்ணுப் பெயரும் அன் என்ற ஆண்பாற் படர்க்கை விகுதியும் சேர்ந்து ஆகியது. ஒன்று என்பது அதிலுள்ள ஈற்று உயிர்மெய் கெட்டும் னகர ஒற்று ரகர ஒற்றாக மாறியும் அந்த ரகர ஒற்றுடன் உகரம் சேர்ந்தும் ஒரு என்றாகியது. (நன்னூல் சூத்திரம் அஅ,கஅசு). அப்படி வந்த ஒரு என்பதனுடன் அன் சேர்ந்த பொழுது, வகர உடம்படுமெய் தோன்றி ஒருவன் என வந்தது.

3. 'ஒன்றே பதி' என மெய்கண்டதேவர் சிவஞான போதத்திலும், "ஒன்று கண்டீருலகுக் கொரு தெய்வமும்" என்று திருமூலர் திருமந்திரத்திலும் (2962) "தெய்வமொருவனே யென்று உணர வல்லிரேல்" என்று ஔவையாரும் கூறியபடிப் பண்டைத் தமிழ் மக்கள் கடவுள் ஒருவனே என்னும் உண்மையை ஐயந்திரிபற உணர்ந்திருந்தார்கள். ஆதலின் அவர்கள் ஒருவன் என்ற சொல்லைக் கடவுளுக்குச் சமய நூல்களில் வழங்கி வந்தார்கள். கடவுளுக்கு அவர்கள் ஒருவன் என்ற சொல்லை வழங்கி வந்ததினால் கடவுள் "தனக்குவமையில்லாதான்" ஆதலின் அச்சொல் ஒப்பற்றவன் என்ற பொருளினும் வழங்கப்பட்டு வந்தது.

4. கடவுள் ஒருவனே என்று உணர்ந்த அவர்கள் அவனை

"முன்னெலா முழுமுதலென்று வானோர் மூர்த்தியாகிய முதல்வன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தினைநகர்த் தேவாரம் ௭-வது பாட்டிற் கூறிய வண்ணம் முழுமுதற் கடவுள் என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் 'பிறப்போடிறப்பென்று மில்லாதான் காண்' என்று திருஆரூர் திருத்தாண்டகம் 5-வது பாட்டிற் கூறியபடிப் பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்றும், "கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் றாளை வணங்காத் தலை" என்று திருவள்ளுவ நாயனார் கூறியபடி மாயையின் தொடர்பில்லாத எல்லாம் அறியும் அறிவுடைமை முதலிய எண்குணங்களை உடையவன் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

**5.** மேற்கூறிய கருத்துக்களை எல்லாம் அடக்கியுள்ள ஒருவன் என்ற சொல் கடவுளைக் குறிக்கத் தமிழ் மறைகளிற் பல இடங்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதே கருத்துக்களைக் கொண்டுள்ள ஒருத்தன் என்ற சொல்லும் ஒன்று என்ற சொல்லும் அவைகளில் வழங்கப்பட்டு வந்துள்ளன. அச்சொற்கள் வழங்கப்பட்டு வந்த சில இடங்களை இங்கே குறிப்பிடுவாம்.

1. "ஓதி நன்குணர்வார்க்குணர்வுடை **ஒருவன்** ஒளிதிகழுருவஞ் சேரொருவர்"
   *திருஞான சம்பந்த சுவாமிகள் திருப்பரம்புரத் தேவாரம் ௯-வது பாட்டு.*
2. "ஒளியார் விடமுண்ட ஒருவன்" .
   *திருஞான சம்பந்த சுவாமிகள் சீகாழித் தேவாரம் ௪-வது பாட்டு.*
3. "உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி"
   *திருநாவுக்கரசு சுவாமிகள் திருஆரூர் போற்றித் திருத்தாண்டகம் ௪-வது பாட்டு.*
4. ஓதியே கழிக்கின்றீர்க ளுலகத்தீர் ஒருவன் றன்னை நீதியால் நினைய மாட்டீர்"
   *திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சோற்றுத்துறை திருநேரிசை ௯-வது பாட்டு.*



4. "ஒருத்தனை உணரமாட்டார்"
   *திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கடவூர் திருநேரிசை ௫-வது பாட்டு.*
6- "நாற்றுனத்து ஒருவனை நானுயபரனை"
   *சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் திருவதிகைத் திருவீரட்டானம் ௪-வது பாட்டு.*
7. "ஒருவனென்னும் ஒருவன் காண்க"
   *திருவாசகம் கீர்த்தித் திருவகவல் ௪௩-வது வரி.*
8. "உரை யுணர் விறந்த ஒருவ போற்றி"
   *திருவாசகம் போற்றித் திருவகவல் ௧௪௨௩-வது வரி.*
9. "என் சிந்தை மேய ஒருத்தன் பெருக்கு மொளி"
   *திருவாசகம் திருவெண்பா ௭-வது பாட்டு.*
10. "ஒப்புனக்கில்லா ஒருவனே"
   *திருவாசகம் பிடித்தபத்து ௯-வது பாட்டு.*
11. "ஊன்பழித் தென்னுள்ளம் புகுந்தென்னுணர்வதுவாகிய ஒருத்தன்"
   *திருவாசகம் குயிற்பத்து ௪-வது பாட்டு.*
12. "ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்"
   *திருவாசகம் அருட்பத்து ௨-வது பாட்டு.*
13. "யாவையுமாம் ஏகத்தொருவனிரும் பொழிலம்பலவன்"
   *திருக்கோவையார் ௭௧-வது பாட்டு.*
14. "ஒளிவளர் விளக்கே வுலப்பிலா ஒன்றே"
   *திருவிசைப்பா: கோயில் ௧-வது பாட்டு.*
15. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
   *திருமந்திரம் 2104-வது பாட்டு.*
16. "ஒன்றென் றிரு தெய்வம்"
   *பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.*
17. "ஒன்றே காணாழி முதலாகிப் பல்லுயிர்க்கும் ஒன்றாகி நிற்கும் சிவம்"
   *ஔவையார் குறள்.*

18. "எள்ளுக்குள் ளெண்ணெய் போலெங்கும் வியாபகமாயுள்ள வொன்றை"
தாயுமான சுவாமிகள் பாடல்: பொருளியலபு ௫-வது பாட்டு.

19. "ஒன்றலா வொன்றுளதாகி நின்றவா றென்றலா வொன்றிலவை யிருதல்"
சிவஞான போதம் ௨-வது சூத்திரவெண்பா.

6. சைவ சமயத்தைப் போல கடவுட் கொள்கையுடைய ஏனைய சமயங்களும் கடவுள் ஒருவனே என்று கூறினும் ஒருவனா யிருக்கிற கடவுள் ஓரிடத்தில் மாத்திரமில்லாமல் எவ்விடங்களிலும் எவ்வாறு நிறைந்திருத்தல் கூடும் என்னும் உண்மையை சைவ சமயம் ஒன்றே விளக்கிக் காட்டுகின்றது. கதிரோன் தன்னின் வேறல்லாததும் தன்னை விட்டுப் பிரியாததுமான கதிரொளியினால் உலகெங்கும் பகற் காலத்தில் நிறைந்திருத்தல் போல கடவுளும் தன்னின் வேறல்லாததும் தன்னை விட்டுப் பிரியாததுமான அருட் சத்தியினால் உலகெங்கும் நிறைந்திருக்கின்றான். அவன் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்கும் நிலையிற் சிவம் எனவும் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையிற் சத்தி எனவும் தாரதன்மியத்தால் இருதிறப் பட்டியைந்து நிற்பன். அவன் தனது அருட் சத்தியால் உயிருலகத்திலும் நிறைந்திருக்கின்றான். அவன் அவ்வாறு எல்லாப் பொருள்களிலும் நிறைந்திராவிடின் அவைக ளியங்கா; அதுவன்றி அவனது முழுமுதற்றன்மைக்கு இழுக்கு உண்டாகும். இவ்வாறு கடவுள் தான் செய்யும் ஐந்தொழிலின் பொருட்டு உயிர்ப்பொருளிலும் உயிரில் பொருளிலும் நிறைந்திருக்கும் தன்மை அவனுடைய பொதுவியல் (தடத்த இலக்கணம்) என்று கூறப்படும். அவன் உயிருக்கு உயிராய் அணுவுக்கு அணுவாய் எங்கும் நிறைந்திருக்கும் பொது இயற்றன்மையில் அநேகன் என்று கூறப்படுவான். அதுபற்றி மாணிக்கவாசக அடிகளும் திருவாசகத்தில் "ஏகன் அநேகனிறைவனடி வாழ்க" என்று கூறியருளினார். இவ்வுண்மையை அறியாது மேற்குநாட்டுக் கிறிஸ்தவர்கள் இவ்வாறு கடவுள்



எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கின்றான் என்னும் கொள்கையைப் பலகடவுட் கொள்கை (Polytheism) என்று இழித்துக் கூறுகிறார்கள்.

7. மூவுருவினர்கள் (திரிமூர்த்திகள்) சைவ சமயத்திற் கூறப்பட்டிருக்கின்றதே என்று ஒருவர் கேட்பின் அவர்கள் மாயா உருவங்களையும் குணங்களையுமுடையவராகக் கூறப்பட்டிருத்தலன்றி முழுமுதற் கடவுளர்களாகக் கூறப்படவில்லை. மூவுருவினர்களுமாகிய அயன், மால், உருத்திரன் என்னும் மூவர்களும் தாங்கள் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தற் றொழில்களைத் தங்களிடத்தில் விளங்கப் பெறுகின்ற அருட் சத்தியைக் கொண்டு செய்கின்றார்கள் என்றும், அவர்கள் தாங்களாக ஒரு தொழிலும் செய்யவல்ல ரல்லரென்றும், அவர்கள் சகலவர்க்க உயிர்கள் என்றும் சைவ சமயம் கூறுகின்றது. இம் மூவுருவினர்களைப் பற்றித் திருஞான சம்பந்த சுவாமிகள் "ஒருருவாயினை மானாங்காரத், தீரியல்பா யொருவிண்-முதல் பூதல, மொன்றிய விருசுடரும்பர்கள் பிறவும், படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள், "கண்ணவனா யுலகெலாங் காக்கின்றானே" "வேதனைய் வேதம் விரித்திட்டானே" என்றும் "உருமூன்றா யுணர்வின் கண்ணொன்றானை" என்றும் மாணிக்கவாசக சுவாமிகள்,

"சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேற்
றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே."

என்றும் கூறியிருத்தல் காண்க.

8. பண்டைக் காலத்தில் தமிழர்கள் ஒரே முழுமுதற் கடவுளைச் சிவனுருவிலும் சத்தியுருவிலும் திருமாலுருவிலும் விநாயகருருவிலும் முருகனுருவிலும் கதிரோனுருவிலும் ஆக அறுவகை நெறியில் வழிபட்டு வந்தார்கள். இப்படி அறுவகையுருவங்களில் முழுமுதற் கடவுளை அவர்கள் வழிபட்டு வந்த சமயம் அறுவகைச் சமயம் எனப்பட்டது. பிற்காலத்தில்

இராமானுஜாச்சாரியார் காலத்திற்குப்பின் சைவம் வைணவம் என இருவேறு கடவுளுடனும் குறிகளுடனும் இருவேறு சமயங்கள் பாகுபாடு செய்யப்பட்டன. இற்றை ஞான்றும் இப் பாகுபாடுகள் பார்ப்பன குலத்தார்களுக்குள் அல்லாமல் ஏனைய சைவ வேளாளர் முதலிய தமிழர்களுக்குள் பொதுவாக உடனுண்ணலுக்கும் உடன் மணத்தலுக்கும் தடையில்லாம லிருத்தலை நாம் காணலாம். சைவர்கள் சாதாரணமாகத் திருமால் பெயரைத்தங்களுக்கு இட்டு வழங்கி வருதலையும் திருமால் கோயிலுக்குப் போய் வழிபட்டு வருதலையும் தங்கள் சிவ பூசையில் அவனை வழிபடுதலையும் நாம் காணலாம். சிவன் கோயில்களில் திருமால் உருவம் அமைத்து வழிபடப்படுதலையும் நாம் காணலாம். ஆனால், வைணவர்கள் பொதுவாகச் சிவன் பெயரை இட்டு வழங்குதலையும் சிவன் கோயிலுக்குப் போய் வழிபடுதலையும் காணுதலரிது.

9. பண்டைத் தமிழ் மக்கள் வழிபட்டு வந்த முழுமுதற் கடவுளாகிய சிவன் தத்துவங்களைக் கடந்தவன். அவனைப் பலதர அறிவுடைய மக்கள் தங்கள் அறிவுக்கு எட்டும் வண்ணம் உருவில் வைத்து வழிபடும் பொழுது தங்கள் தங்கள் அறிவுக்குப் பொருந்தியவாறு பலவகை உருவங்களில் வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறு பலவகை உருவங்களில் வைத்து மக்கள் வழிபடும் வழிபாடு ஒரு முழுமுதற் கடவுளையே அடைகின்றது. அம்முழுமுதற் கடவுளே வழிபடுவார் வழிபடும் பல உருவங்களில் நின்று அருள் செய்கின்றான். சதாசிவன் மகேசன் அநந்தேஸ்வரர், ஸ்ரீகண்டதேவர், உருத்திரன், திருமால், அயன் முதலிய வடிவங்களில் வைத்து மக்கள் வழிபடும் வழிபாடுகளெல்லாம் மாயா வடிவங்களுக்கு எட்டாத முழுமுதற் கடவுளையே அடைகின்றன. பலவகை உருவ வழிபாடுகளால் முழுமுதற் கடவுள் என்னும் உண்மை மறுக்கப்பட மாட்டாது. திருஞானசம்பந்த சுவாமிகள் "நானாவித உருவாய் நமை ஆள்வான்" என்றும், "இராமேச்சுரத் தொருவனுமே பலவாகி நின்ற தொரு வண்ணமே" என்றும் "ஏறூர்தரு மொருவன் பல உருவன்" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள்" ஆரொருவருள்குவாருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்கின்றவருளுந் தோன்றும்" என்றும் தேவாரங்களில் கூறியிருத்தல் காண்க. காரைக்காலம்மை அற்புதத் திருவந்தாதியில் "நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக நீலமணி மிடற்றானீர்மையே—மேலுலந்த தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவேயாம்" என இவ்வுண்மையைப் பற்றிக் கூறியிருக்கின்றார். நலந்தரு பேத மேகநாதே நடிப்பன் என்று சிவஞான சித்தியார் நூலில் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் கூறியதும் இவ்வுண்மையே. தாயுமான சுவாமிகளும் "ஏகமான உருவான் நீ அருளினால் அனேக உருவாகியே" எனச் சிற்சுகோதய விலாசத்தில் கூறியருளினார். ஆனால் கடவுள் ஒருவனே காரணமின்றி ஒரு விளையாட்டினால் உயிர்கள் பலவும் உயிரில் பொருள்கள் பலவும் ஆயினான் என்று ஏகான்மவாதிகள் மயங்கி அறிதல் போலப் பண்டைத் தமிழ் மக்கள் அறியவில்லை. உயிர்கள் தங்களை அநாதியே சேர்ந்துள்ள ஆணவ மலத்தினின்று நீங்கித் தன்னை அறிந்து உய்யும் பொருட்டுக் கடவுள் தனது அருட்சத்தியால் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நின்று அவற்றினையுங் கடந்து நிற்கின்றான் (விசுவாதீதன்) என்ற உண்மையை அவர்கள் அறிந்திருந்தார்கள்.



10. ஒன்று என்ற சொல்லாற் குறிக்கப்பட்ட கடவுள் எல்லாப் பொருள்களினுஞ் சேர்ந்திருத்தலின் அஃது ஒற்றுமை என்ற பொருளிலும், வீடுபேற்றிற்குக் காரணனாயிருத்தலின் வீடுபேறு என்ற பொருளிலும், உண்மைக்குக் காரணனாயிருத்தலின், ஒரோவழி உண்மை என்ற பொருளிலும் வழங்கப்பட்டு வந்தது. கடவுள் எல்லாப் பொருள்களினுஞ் சேர்ந்திருத்தலின் ஒன்று என்ற சொல்லிலிருந்து சேர்தல் என்னும் பொருள்பட ஒன்றுதல் வந்தது. அக்காரணம்பற்றியே அதிலிருந்து ஒருமை, ஒருப்பாடு, ஒருங்கு, ஒற்றுமை என்ற சொற்களும் வந்தன. ஒண்டுதல், ஒட்டுதல் என்ற சொற்களும் ஒன்றுதல் என்பதன் விகாரங்களாம். கடவுள் எல்லா உயிர்ப்பொருள்களிலுங் கலந்து வேறற (அத்துவிதமாய்) நிற்கின்றான் என்ற

உண்மையே இச்சொற்களின் பொருள்களுக்கு அடிப்படையான காரணமாயுள்ளது.

11. கடவுள் அருட் சத்தியாகிய உமாதேவியோடு ஒரு முதற்பொருள் என்றாவது இருமுதற் பொருள்கள் என்றாவது சொல்லக்கூடாத வண்ணம் கலந்திருக்கின்றான் என்ற சைவ சமய உண்மைபற்றி பண்டைத் தமிழ் மக்கள் கடவுளின் அம்சமாகிய ஆண் உயிரையும் உமாதேவியின் அம்சமாகிய பெண் உயிரையும் சேர்த்து ஒருமுதற் பொருள் என்றாவது இருமுதற் பொருள்கள் என்றாவது குறியாமல் ஒன்று என்ற பகுதியால் ஒருமையையும் அர் என்ற விகுதியால் பன்மையையும் குறிக்கிற ஒருவர் என்ற சொல்லால் வழங்கி வந்தார்கள். இப்பேச்சு வழக்குப்பற்றித் தொல்காப்பிய நூலார் "ஒருவர் என்னும் பெயர்நிலைக்கிளவி—யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை" என்று சூத்திரம் செய்தனர். பிற்காலத்து வந்த நன்னூல் இலக்கண நூலாரும் "ஒருவரென்ப துயரிருபாற்றாய்ப் பன்மை வினை கொளும் பாங்கிற்றென்ப" எனக் கூறினார். இந்தப் பேச்சு வழக்கும் நூல் வழக்கும் தமிழ் மொழியினில் அன்றி வேறு எம்மொழியிலுமிருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

12. மேலே கூறியபடி ஒருவன் என்ற சொற்பொருள் ஆராய்ச்சியால் பண்டைத் தமிழ் மக்கள் உலகிற்கு முழுமுதற் கடவுள் ஒருவனே என்ற உண்மையையும் அவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றான் என்ற உண்மையையும் அறிந்திருந்தார்கள் என்பது நன்கு புலனாகும்.

---



# கொங்கு நாடும் உரோமானிய நாணயங்களும்

[திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள்.]

கொங்கு நாட்டில் கோயமுத்தூருக்கு அடுத்த போத்தனூர் ஜங்க்ஷனுக்குக் கிழக்கு 3 மைல் அளவில் வெள்ளலூர் என்ற பழமையான ஓர் ஊர் இருக்கிறது. நாளது 1931-ம் ஆண்டு ஜனவரியீ 16-ம் தேதியன்று அவ்வூரில் கூத்தாண்டி மேடை என்ற இடத்திற்கு அருகில் ஒரு சிறுவன் விளையாட்டிற்காகப் புழுதி மண்ணில் குழி தோண்டுகையில் ஒரு சிறு மண் குடத்தைக் கண்டெடுத்தான். அது பழைய காலத்துக் குடமாக இருந்தது. அதை உடைத்துப் பார்க்கையில் 121 வெள்ளி நாணயங்கள் அதற்குள் இருந்தன. உடனே கிராமாதிகாரிகளுக்குத் தெரிந்து அந்நாணயங்களையும் உடைந்த குடத்துண்டுகளையும் கலெக்டர் ஆபீசுக்கு அனுப்பிவிட்டார்கள். கலெக்டர் உத்தரவின் பேரில் அந்நாணயங்களை நான் பார்வையிட்டேன். அவைகள் 35 ரூபாய் எடை கொண்ட 121 உரோமானிய நாணயங்களாக இருந்தன. அவைகளில் 10 நாணயங்கள் வெகு அழகாகவும் நன்றாகவும் இருந்தன. மற்றவை மண் ஒட்டிக் கொண்டிருந்தன. சுத்தமாகக் கழுவினால் அவைகளையும் பரீட்சித்துக் காண முடியும். வெள்ளியோ சொக்கமாகவும் பளபளவென்றும் இருக்கின்றது. நாணயங்களில் உள்ள உருவங்கள் செதுக்கின உருவங்களைப்போல வெகு நன்றாகவும் அவைகளின் குணத்தையும் சொல்லக்கூடிய அவ்வளவு நுணுக்கங்களைக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன. நாணயங்கள் சுத்தமாகவும் தேயாமலும் இருக்கின்றமையால் அவைகள் வெகுநாள் பழக்கத்தில் இருந்திருக்க மாட்டா என்று துணிவாகக் கூறலாம். அவைகள் ஒருவேளை தேசீய அல்லது இராஜரீகப் புரட்சியின் காரணமாக வெகு காலத்திற்கு முந்தியே புதைக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடியும்.

அந்நாணயங்களிற் சிலவற்றின் விவரங்களை இனிக் குறிக்

கிறேன்: ஒரு நாணயத்தில் ஒரு புறத்தில் கி. மு. 44 முதல் கி. மு. 14 வரை ஆண்ட அகஸ்தஸ் சக்கரவர்த்தியின் உருவமும் அதனைச் சுற்றி, Caesar Augustus என்ற எழுத்துக்களும், மற்றொரு பக்கத்தில் ஒரு மானிட உருவம் ஒரு கையில் ஈட்டியும் மற்றொரு கையில் பூவேலை செய்த செங்கோலும் கொண்டிருக்கவும், அதனைச்சுற்றி Maxim Pontif என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. மற்றொரு நாணயத்தில் ஒரு புறம் ஒரு சக்கரவர்த்தியின் உருவமும் அதனைச் சுற்றி Caesar என்றும், மற்றொரு பக்கத்தில் எட்டு மூலைகள் காட்டும் கோடுகளும் அதனைச்சுற்றி Divus Julius என்றும் வரையப்பட்டிருக்கின்றது. மற்றொரு நாணயத்தில் ஓர் அரசன் தலையும் அதனைச்சுற்றி Davius Pater Patrias என்றும் கண்டிருக்கிறது. மற்றொன்றில் 4 குதிரைகள் ஒரு இரதத்திற்குக் கட்டப்பட்ட உருவமும் அதனைச்சுற்றி Imp Vii. என்றும் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் அரசன் உருவமும் அதனைச் சுற்றி Augustus என்றும் மற்றொரு புறத்தில் ஓர் காளை தன் வாலைத் தூக்கிக்கொண்டு பாய்கிற நிலையில் உள்ள உருவமும் அதனைச்சுற்றி Imp x என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் உட்கார்ந்த உருவமும் அதனைச்சுற்றி Constantine என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரசன் கி. பி. 323 முதல் கி. பி. 337 வரை ஆண்டவன். இன்னமும் பல இருக்கின்றன. ஆகவே இந்நாணயங்கள் கி. மு. 44 முதல் கி. பி. 337 வரை ஆண்ட அரசர்களின் நாணயங்களாக இருக்கின்றன.

இதே வெள்ளலூரில் 1842-ம் ஆண்டில் ஒரு புதையல் கிடைத்தது; அதில்,

| | | |
|---|---|---|
| அகஸ்டஸ் | (கி. மு. 44—கி. பி. 14) | (Augustus) |
| ட்ருசஸ் | ( 8 கி. மு.—) | (Drusus) |
| ஜெர்மேனிகஸ் | | (Germanicus) |
| டைபீரியஸ் | (14 — 37) | (Tiberius) |
| கலிகுலா | (37 — 41) | (Caligula) |
| க்லாடியஸ் | (41 — 54) | (Claudius) |



முதலான அரசர்களின் நாணயங்கள் இருந்தன. மேலும் வெள்ளலூரிலன்றிக் கொங்கு நாட்டில் பொள்ளாச்சி, கரூர், கலயமுத்தூர் முதலான இடங்களிலும் அநேக புதையல்கள் கிடைத்திருக்கின்றன. இந்நாணயங்களின் உருவம், அழகு, முதலியவைகளைக் கவனித்தால் கொங்கு நாட்டில் அக்காலத்தில் உரோமானியர்கள் அதிகமான வியாபாரம் செய்து கொண்டிருக்க வேண்டும், அதற்காக ஒரு குடியேறின இடமும் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

மேலும் இவ்வெள்ளலூர் மிகுந்த பழமையான ஊர் என்பதற்கு வேறு சில அறிகுறிகள் உண்டு. இவ்வூர் முந்தி நொய்யலாற்றங் கரையில் இப்போதிருக்கும் ஊருக்குச் சிறிது தூரத்தில் கட்டப்பெற்றிருந்து பின்னால் அஃது அழிந்து போயிருக்கும் குறிகள் அங்கே காணப்படுகின்றன. அங்கே ஒரு புழுதி மேட்டில் பாண்டவர் குழிகள் என்று சொல்லும் மாண்டவர் குழிகள் இருந்தன. அவ்விதம் இறந்தவர்களை முற்காலத்தில் அடக்கம் செய்து வந்த வழக்கத்தை * மணிமேகலையில் கூறியிருப்பது காணலாம். பாண்டவர் குழிகள் அருகில் இருக்கும் பேரூரிலும் இருந்தன. இவைகளைப்பற்றி விவரமாக பேரூர்ப் புராணம் இரண்டாம் பதிப்பில் காணலாம். இக்குழிகள் இருப்பதைக்கொண்டு இவ்வூர் பல ஆயிர ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஐயமின்றிக் கூறலாம்.

இவ்வெள்ளலூரில் பழமையான ஆலயங்கள் மூன்று உள்ளன. இவை மூன்றும் இப்போதிருக்கும் ஊருக்குச் சிறிது தூரத்தில் உள்ளன. அவைகளில் சிவாலயம் பெரியது. சுவாமிக்குத் தேனீச்சுரமுடையார் என்று பெயர். கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் "தென்னூருடையார்" என்ற பெயர் காணப்படுகிறது. ஊருக்கு 'அன்னதான சிவபுரி' என்றும் 'வள்ளலூர்' என்றும் 'தென்னூர்ப்பாடி' என்றும் பெயர்கள் காணப்படுகின்றன. கி. பி. 1004 முதல் 1041 வரை ஆண்ட விக்கிரம சோழன் என்ற கொங்கு சோழனுடைய

* தாழியிற் கவிப்போர் தாழ்வயின் அடைப்போர்.

சாசனங்கள் இருக்கின்றன. மேலும் சேர அரசர்கள் " சந்திராதித்திய குல" திலகனான "கோக்கண்டன் வீரநாராயணன்", "கோக்கண்டன் ரவி" என்ற அரசர்களின் இரண்டு சாசனங்கள் இருக்கின்றன. அவ்வெழுத்துக்கள் மிகப் பழையவை. 9-வது நூற்றாண்டின் எழுத்துக்களைப்போல் இருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் இவைகள் சோழ அரசன் ஆதித்திய சோழன் காலத்தவை என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வாலயத்தில் மிகப் பழமையான பல கல்வெட்டுகள் இருந்தாலும் அவைகள் மிகவும் மழுங்கிக் கிடக்கின்றமையால் அவைகளை வாசித்து அறியக் கூடவில்லை.

இவ்வூரில் உள்ள மற்றொரு பண்டைய ஆலயம் வரதராஜப் பெருமாள் ஆலயம். இவ்வாலயத்திலும் பல கல்வெட்டுகள் உள. ஒன்றைத்தான் அரசாங்கத்தார் எடுத்துள்ளார்கள். ஏனையவை மழுங்கிப் போய்விட்டன. கிடைத்த கல்வெட்டு ஹொய்சள அரசன் வீர வல்லாள தேவன்—3-வது அரசன் காலத்தது. ஆகவே அது 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

நொய்யலாற்றுக்கு அடுத்து அழகு நாச்சியம்மன் ஆலயம் ஒன்று இருக்கின்றது. இதிலும் கல்வெட்டுகள் இருக்கின்றன; ஆனால் அரசாங்கத்தார் இதைக் கவனிக்க வில்லை. இதில் கற்களை மாற்றிப் பிற்காலத்தார் கட்டிடம் புதிப்பித்திருக்கிறதினால் சாசனத்தைப் பூர்த்தியாக வாசிக்க முடிகிறதில்லை.

இத்தன்மையான பழமை வாய்ந்த இந்த வெள்ளலூரில் உரோமானிய நாணயங்கள் காணப்பட்டவை ஆச்சரியமல்ல. நம் நாட்டு மக்கள் தங்கள் பூர்வீக மேன்மையை அறிய வேண்டும் என்ற ஆசை இல்லாததினால்தான் இவ்வித ஆராய்ச்சிகள் அதிகமாகத் தென்படுகிறதில்லை. இனிமேலாவது கல்விமான்கள் இவ்வூரில் உள்ள பண்டை இடங்களைச் சோதித்து அங்கே மூழ்கிக் கிடக்கும் அருமையான பொருள்களையும் அவற்றின் சரித்திரங்களையும் வெளிப்படுத்தி நாட்டுக்கு உழைப்பார்களாக.

---



# ஆய்தம்.

[இராம சுப்பிரமணிய நாவலர்.]

**ஆய்தம்** திருந்திய சுவையுடை யருந்தமிழ் மொழிக்குச் சிறப்பாயதோர் எழுத்து. அஃது தமிழ் நெடுங்கணக்கின்கண் நடுவண் வைத்து எண்ணப்படும். ஈண்டு நடுவண் என்றது உயிரெழுத்தின் முன்னரும் மெய்யெழுத்தின் பின்னருமாய நிலைமையாம். சிலர்க்கு எழுத்துக் கற்பிக்கப்படும்போழ்து, தொல்லாசிரியர் மரபின் வந்த தமிழறிஞரும் ஆய்தத்தினை இடைவைத்தே கற்பிக்கின்றனர். சிலர், அதனை ஈற்றிற் கொண்டு கற்பிக்கினும் அது முறையன்றென்பது,

> "ஆவி யகரமுத லாறிரண்டா மாய்தமிடை
> மேவுங் ககரமுதன் மெய்களா—மூவாறுங்
> கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
> நண்ணுமுதல் வைப்பாகு நன்கு." —நேமிநாதம்

என்பதனால் தெள்ளிதின் உணரப்படும். இதனுள், 'முறைமையால்' என்பது கூர்ந்து கருதற்பாற்று; எனவே, ஆய்த மிடைவைத் தெண்ணப்படும் என்பது வலியுறும்.

இனி அவ்வாய்தம் நந்தமிழிற்கு எவ்வாற்றான் பயன்படும் என்பது ஆராயற்பாற்று.

> " அக்கேன மாய்தந் தனிநிலை புள்ளி
> ஒற்றிப் பால வைந்து மிதற்கே'.

என்பதனால், அக்கேனம், ஆய்தம் தனிநிலை, புள்ளி, ஒற்று என்னும் ஐந்தனையும் ஆய்தம் பெயராகப் பெறும் என்பது உணரப்படும். ஆய்தத்தை 'அக்' எனக் கூறிப் பயிற்றுவிக்கும் முறைமையுளது. அதனோடு 'ஏனம்' என்னும் சாரியையைச் சார்த்த 'அக்கேனம்' என ஒலி பெறும். ஆயுத வடிவாயிருத்தலின் ஆய்தம் எனப் பெயராயிற்று என்ப ஒரு சாரார். முற்றிலும் ஆய்தம் போன்றே வடிவுடைத்தாகிய ஓராயுதம் இன்மையானும், ஆயுதம் என்னும் வடமொழி தமிழ்ச் சிறப்பெழுத்து ஒன்றற்

குப் பெயராதல் சாலாமையானும் அது கருத்தன்றென்பது. 'ஆய்' என்பது மென்மை, நலிவு என்னும் பொருட்பெறுதி உடைத்தாகலின், ஆய்தம் என்பது நலிவுடைத்தாகிய இசை பெறச் சொல்லப்படுவது என்னும் பொருட்டாம் என்பது வலியுறும். அன்றியும், "நலிபுவண்ண மாய்தம் பயிலும்' என்ப வாகலின் ஆய்தம் பயின்று வருவதே நலிபுவண்ணம் எனப் பெயர் பெறுதலானும் அஃதொக்கு மென்பது. உயிர் போலவும் ஓரோவிடத்து ஒற்றுப்போலவும் ஒலித்து உயிர் மெய்கட்கிடை நிற்றலான் தனிநிலை எனப் பெயர் பெறும்.

"அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்"

என்பதனுள், முதலடியிலும் இரண்டாமடியிலும் ஆய்தம் ஒற்றுப்போல் ஒலித்தலும்,

"அறரு ளளவறிந் தண்க வஃதுடம்பு
பெற்ரு னெடிதுய்க்கு மாறு"

என்பதன்கண் உயிர்போல் ஒலித்தலும் உணர்க. மூன்று புள்ளி வடிவாயிருத்தலானும் மெய் யெழுத்துப்போன்று பயன்பெறுதலானும் புள்ளியென்னும் பெயராயிற்று. ஒற்றுப்போன்று செய்யுட்கண் பயன்பெறலானும்,

"விலஃகி வீங்கிரு ளோட்டுமே மாத
ரிலஃகு முத்தி னினம்"

என்ருற்போலச் சில்லிடத்து ஒற்றில்வழி ஒற்ருய் நிறுவப் பெறலானும் ஒற்று என்பதும் அதற்கோர் காரணக்குறி.

அவ்வாய்தம் குறியதன் முன்னரும் உயிரேறிய வல்லெழுத்தின் மேலுமாகிய அவ்விரண்டின் நடுவண் வரும் என்ப.

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே."
—தொல்காப்பியம்.

"ஆய்தந்தானே குறியதன் கீழ்த்தாய்
வலியதன் மேல்வந் தியலுமென்ப"

என்பனவற்றை நோக்குக. ஆய்தப் புள்ளி எனவும் ஆய்த வெழுத்து வழங்கப்படும்.



வலியதன் முன்னர்ப் பிற எழுத்துக்கள் தொடரவும் பெறும். அவை நெடிலாகவும் பெறும். குறியதன் பின்னரும் பல வெழுத்துத் தழுவி நிற்கப்பெறும். ஆயினும், பெரும் பாலும் அங்ஙனம் தழுவுவது அடையாமிடத்தே யாம்.

எஃகு, கஃசு ஈண்டு ஆய்தம் குறியதன் முன்னர் வலியதன் மேற்ருயிற்று.

வெஃகா, அஃதான்று—ஆய்தத்தின் முன்னர் ஒன்றும் பலவும் எழுத்துக்கள் தொடர்ந்தன. ஆய்தத்தைச் சார்ந்த எழுத்துக்கள் நெடிலுமாயின.

ஒருபஃது இருபஃது குறியதன் பின்னர் எழுத்துக்கள் தொடர்ந்தன. ஆயினும், அவை அடையாய் நிற்ப, பஃது என்பதே ஒரு சொல்லாய் நின்றது.

ஆய்தம் தமிழிற் சில்லிடத்து உயிராகவும் சொல்லப்பெறுமாகலின், பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியில் எழுதுதலின்கண், நலிந்து நிகழு மோசைக்கு மிகப் பயன்பெற்று நிற்கும். உயிர்க்கு மெய்க்கும் ஒரு சிறப்பாய் இன்றியமையாது அமைந்தமை சுட்டற்கே அஃது அவற்றின் இடைக்கண் நிறுவப் பெற்றது போலும்!

---

# கருமை

[திருக் கபசம் எழுதியது]

(முன் ௮௯-ம் பக்கத் தொடர்ச்சி)

ந, ம, சி, வ, ய என்ற ஐந்தெழுத்துக்களில் முதன் மூன்றையும் ஏ. ந; ப. ம; ஸி. சி; என இருவரிசைகளாக நிறுத்திக் கால் தொடங்கித் தோள் வரையில், முதுகெலும்பு நடுவாக இடம், வலமென்று பிரிந்து நிற்கும் உறுப்புக்களைக் குறிக்குமாறு வகுக்கு மொருமுறை தமிழுலகி லிருந்ததென்பது, சிதைந்து கிடக்குஞ் சித்தர் நூல்களால் நமக்குத் தெரிகின்றது.

"நவ்விரண்டு காலதாய் நவின்றமவ்வு வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய், சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் எழுந்துநின்ற நேர்மையிற்
செவ்வையொத்து நின்றதே சிவாயவைந் தெழுத்துமே"

(சிவவாக்கியர்).

என்று கூறியதிலிருந்து மேற்குறித்த முறை வெளிப்படுகின்றது. வகாரமும் யகாரமும் வாயையுங் கண்களையுஞ் சுட்டுமென்று பகரப்பட்டது. நகாரம், வயிற்றிற்குக் கீழுள்ள உடற்பகுதியை யையுங் கால்களிரண்டையுங் குறியாநின்றது. உடலை ஆறு வீடுகளாக (ஆதாரம்) வகுக்குமுறையில் வயிற்றின் கீழிருக்கு முட்பகுதி அயன் வீற்றிருக்கு மிடமென்று கூறப்படுகிறது. அன்றியும், நிலம், புனல், அனல், வளி, வெளி என்ற ஐந்தனுள் நிலத்தைச் சுட்டும் உடற்பகுதி நகரத்திலடங்கிய தென்று மொழிப. ஒரு மகன் உட்கார்ந்திருக்கு நிலையில் மண்ணொடு பொருந்தும் உடற்பகுதிகள் நகரத்தாற் குறிப்பிடப்படுவனவே யாதலின், நகரத்திற்கும் நிலத்திற்குமுள்ள பொருத்தம் தெளிவாக வெளிப்படுகின்றது. நகரத்தின் வலதுபக்கத்திலுள்ளவளைவு தொடைக்குமேலுள்ள சதையின் வடிவத்தை யொத்திருப்பது காணுதற்கெளிது. இட முறையாக நகரத்தை எழுதினால், இடது பக்கத்திலுள்ள உடலின் கீழ்ப்பகுதிக்கு அஃதறிகுறி யாகின்றது. ஆயின், நகரமுந் தகரத்தைப் போல் நீண்ட காலுடன் எழுதப்பட வேண்டுமென்பதை யறிகின்றோம். நகரமும், அயனும், நிலமும் ஒன்றிய தன்மை உற்று நோக்கத்தக்கது. படைத்தற் கடவுளென்று பழைய நூல்களெல்லாம் அயனைப் பரவுகின்றன. படைத்தலென்பது ஆண், பெண் கூட்டமே யொழிய வேறன்று. முப்புரமெரிசெய்த முன்னோன் தவத்திலிருந்த காலை படைப்புத் தொழில் நிகழாது உலகம் வருந்திய தென்றும், இஃதறிந்த நான்முகன் முக்கணன்மீது காமவேளை ஏவினனென்றும் புராணம் அறைகின்றது. படைப்பென்பது புணர்ச்சி யன்றெனின், மலர்வாளி தொடுப்பவன் துணையை மலரவன் நாடிய தெற்றிற்கு? இஃதென்னையினுமாக; நமதளவிற் படைத்தலென்பது புணர்ச்சியினாற் கருவுரு வாக்குதலே யாம்.



புணர்ச்சியின்மேல் வேட்கை எழுப்புதற்கு நறுமணமுள்ள புதுமலர்கள் செய்யுந்துணை இத்துணை யத்துணை யன்று. பூங்கணை யெய்யும் மதவேள் துணையை அயன் தேடியது வியப்பன்று. நிற்க; அயன் படைப்புக் கடவுளாயின், அவன் வீற்றிருக்குமிடம் அத்தொழில் நிகழ்தற்கேற்றதா யிருக்க வேண்டுமன்றோ? இது கருதி நகரத்திற்குள் நான்முகனுக்கிடம் வகுக்கப்பட்டது. புணர்ச்சிக் கருவிகள் நகரத்தாற் சுட்டப்படு முடற்பகுதியுளமைந்திருத்தல் காண்க. மண்ணென்பது ஐந்தனுள் மிகத்திண்ணியதென்பது பற்றியும், படைப்பு, பிறப்பு என்பன சித்தர்களால் மிகுதியும் வெறுக்கப்பட்டமை பற்றியும், ஐந்தெழுத்தில் நகரங் கீழ் நிற்கின்றது. இக்கருத்தை இன்னும் பெருக்கிக்கொண்டு போகாது இத்துடன் நிறுத்துதும்.

இனி, மகாரம் வயிற்றைக் குறிக்கும்:—

நவ்வெழுத்தே பிரமனு ராகு மதில்
நாரணன் மவ்வெழுத் தானுனே
சிவ்வெழுத்தே தெய்வ ருத்திரனும் இன்னுஞ்
செப்புவேன் கேளடி ஞானப் பெண்ணே.

(ஞானக்கும்மி)

மகாரத்திற்கும் வயிற்றிற்குமுள்ள உருவ ஒற்றுமை இத்தகைத்தென நமக்கு விளங்கவில்லை. உடற்கூறு அறிவு கொண்டு துருவிப் பார்க்கின் ஒற்றுமை விளங்கலாம். வயிறு மாலுக்கிருப்பிடமாகக் கொள்ளப்படுகின்றது. உடலைப் பேணி வளர்ப்பது வயிறாதலால், அது மாலுடன் பொருந்தியதே யாகும். காத்தற் கடவுளென்று மால் சிறப்பித்துப் பேசப்படுகின்றான். காத்தலென்பது வளர்த்தலே. அன்றியும், யாக்கையில் நீர் மிகுந்த விடங் கும்பியாகும். நீருக்கு மாலுக்குமுள்ள பற்று உலகறிந்தது. நீரில் துயில் கொள்வோனைத் திருமால் நீட்டப்படுவதை முன்கண்ட விடத்து, தூக்கத்திற்கு மிருளுக்குமுள்ள தொடர்பைக் காட்டித் திருமாலின் கருமைக்கொரு வகையிற் காரணங் கூறினும். ஈண்டதை நினைவிற் கொணர்தல் நன்று. புனல் பெருகி உலகழியுங்கால் (பிரளய காலத்தில்) யாவற்றையுந் திருமால் தன் வயிற்றுளடக்கி, ஏற்ற காலத்தில் முன்போல்

யாவற்றையும் வெளிப்படுத்து கின்றானென்று கூறுப. உலகந் திருமாலின் வயிற்றுளொடுங்கிப் பின் தோன்றி விரிதல், வளர்ந்து முதிர்ந்த மகன் மறுபடியுங் கருப்பையுட் புகுந்து வெளிப்படுதலை யொக்கும். ஆனாலித்தகைய செய்தி நிகழ்வதில்லை. நிகழ்வது யாதெனின், ஒவ்வொரு உயிரும் தான் மாள்வதற்கு முன் தன்னைப்போல் வளரத்தக்க ஒரு கருவை உண்டாக்குவதே. ஆலமரம் ஆலவிதையி லொடுங்குவதே இதற்குப் போதிய சான்றாகும்? ஆலமரம் ஆலவிதையிற் கருவாயிருக்கின்றது. ஆண்டினிருட் பகுதியையு மொளிப் பகுதியையும் விரித்துரைத்த விடத்து அது விளக்கப்பட்டது. அயன் அமர்ந்திருக்கும் நகரத்தில் தோன்றிய உயிர் மாலின் இருப்பிடமாகிய மகரத்தில் கருவாய்த் தங்குகின்றது. நகரம் நிலத்தைக் குறிக்கு மெழுத்தென்று சொன்னோம். மகரம் நீரைக் குறிக்கு மெழுத்தென்பதை யறிந்து கொள்க.

வயிறென்பதுங் கருப்பை என்பது மொருபொருளில் வருஞ் சொற்கள். 'பெற்ற வயிறு' என்று சொல்லும் வழக்குளது. இது கொண்டுந் திருமாலுக்கு வயிற்றை இடமாக வகுத்ததன் முறை யறியப்படும். கருவில் உடல் மேல் உயிர் வந்தொன்றும் வகை அறிதற்கரிது. ஆயினும், கருப்பையிற் புகும்பொழுதே உயிரைக் கருமை (ஆணவம்) பற்றுகின்றதென்று கூறலாம். "காரிட்ட வாணவக் கருவறை" என்று தாயுமானார் நவின்றது காண்க. கருவுங் கருமையு மீண்டியைந்தன. இவற்றிற்குள்ள பொருளொற்றுமையும் எழுத்தொற்றுமையு மூன்றி நோக்கற்பாலன. அழிவில்லாத உயிரின் வரலாற்றைக் குறித்துத் தமிழருக்கிருந்த கருத்தொன்று இதிலடங்கியிருக்கிறதென்று நினைக்க ஏவப்படுகின்றனன். யாவற்றையுங் கருவில் தாங்குந் திருமால் கரிய நிறத்தினனாய்க் கருதப்படுதல் ஒக்குமன்றோ?

கருவில் முதலிற் குழவி தோன்றும்போது அதன் உருவம், மீன், ஆமை, பன்றி முதலியவற்றின் கருவுருவை யொத்திருக்கின்றது. கரு முதிர்ந்து வளர வளர வேற்றுமைகள் புலப்படுகின்



றன. மக்கட் கருவையும் பிற கருக்களையும் வெவ்வேறு நிலைகளில் ஒப்பிட்டுப் பார்த்திதை அறிஞர்கள் வெளியிட்டிருக்கின்றனர். பொதுவாக, இயங்குதிணை யுயிர்களெல்லாம் நீரிற் பிறக்கின்றன. 'அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகி யொரு வாகமாகி' என்பது உண்மை. முட்டையில் நீரிருத்தல் வெளிப்படை. நீரோடு சேர்த்தெண்ணப்படு முயிர் மீன். ஆதலின், மீன் கருவிலிருந்து பிறப்பென்பது தொடங்குவதாகக் கொண்டு, கருப்பையிற் கழியும் பத்துத் திங்களினுந் தோன்றும் வேற்றுமைநோக்கி, பத்துப் பிறப்புகள் (அவதாரங்கள்) எழுந்தன வென்று நினைக்க விடமுண்டாகின்றது. திருமாலின் மீன், ஆமை, பன்றி என்ற பிறப்புக்களை இவ்வாறு பொருள் செய்து, அவன் உலகத்தைக் கருவில் தாங்குகின்றானென்பதன் நுட்பத்தை யோர்க. நீரிலன்றி மீன் உயிர் தாங்காது. ஆமை நீரினும் நிலத்தினும் வதியும். பன்றி நிலத்தின்கண் வாழ்வதாயினும், நீருநிலமுங் கலந்த விடங்களை விரும்பும். இம்முறையில் திருமாலின் வேறு பிறப்புக்களையு மமைத்துக் கொள்க. உயிர் என்பது முதன்முதல் நீரிற்றோன்றிப் படிப்படியாக நிலத்தில் வதிவதற்கேற்ற வமைப்புப் பெற்றதென்று சொல்லுவாருளர். ஈண்டுக் காட்டப்பட்டவற்றால் மகரமாகிய வயிறு மாலுக்கிட மாவதன் இயைபு நன்கு விளங்கும்.

பிறந்தபின் மக்கட்குழவி விலங்கை யொத்திருக்கின்றது. ஏனெனின், அது காலுங் கையுங்கொண்டு தவழ்ந்து திரிகின்றது. எழுந்து நிற்குமளவும், நகரத்தின்மேல் மகரம் வரவேண்டிய முறை குழவியிற் காணப்படவில்லை. ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்களை ஒன்றின்மே லொன்றாய் அடுக்கிப் பார்க்கும் பொழுது, நிலத்தைக் காட்டுங்கால் (ந) கீழாகவும், எண் கடந்த வெளியைக் குறிக்குந் தலை (ய) மேலாகவும், திண்ணிய மண்ணிலிருந்து நுண்ணிய விண்ணுக்குப் படிப்படியாகச் செல்லும் ஓர் ஒழுங்கு காட்சிக் கெட்டுகின்றது. இங்ஙனம் தாழ்ந்தது கீழாகவும், உயர்ந்தது மேலாகவும் மக்களுடம்பு இயற்றப் பட்டிருப்பதால், பிற உயிர்களினு மக்கள் சிறப்புடையரென்பதறியப்படுகின்றது. தவழ்ந்து செல்கின்ற குழந்தையில், நகரங்

கீழ், யகரம் மேல் என்ற முறைக்கு மாறாக, நகரம் (கால்) பின்னாகவும், யகரம் (தலை) முன்னாகவும் அமைகின்றன. மக்கள் நீங்கிய பிற இயங்குதிணை யுயிர்களும் இவ்வாறே அமைப்புப் பெற்றிருக்கின்றன. இவ்வமைப்பு மக்களமைப்பினின்றும் விலகி யிருப்பதால், பண்டைத் தமிழர் விலங்கு என்ற பெயரை அவ்வமைப் புடையவற்றிற் கிட்டனர். விலங்கு என்ற பெயர் மிக நுட்பமான ஆராய்ச்சியாற் பிறந்த தென்பதை நாமறிதல் வேண்டும். விலங்கு என்ற கிளவி மலை என்ற பொருளில் வழங்கப்படும் பொழுதும் 'குறுக்கே கிடப்பது' என்ற பொருளதினுளது. விலங்கு போல் வாழ்ந்திடாது மேனோக்கி வாழவேண்டுமென்பதை யறிவிக்கவே ந, ம, சி, வ, ய என்ற ஐந்தெழுத்துக்கள் வகுக்கப்பட்டன.

(தொடரும்)

---

# இலக்கண நூற் பயிற்சி

(காழி. சிவ. கண்ணுசாமி B. A.)

இலக்கணப் பயிற்சி யில்லான் வாணிபமும் வேளாண்மையுமொழிந்த ஏனைய தெதற்கு முதவான். அற்றன்று; எட்டைப் பிடித்து இரண்டெழுத்தேனும் பிழையற வெழுத வறியார் பலர் படைப்புப் பல படைத்தும் பட்டம் பற்பல வெய்தியும் உயர்ந்த நிலையில் இருக்கக் காண்கின்றேமா லெனின் அவை தாமும் அவர் தம் அறிவாற்றலான் நல்லாற்றி லெய்தியதல்ல என்பது துணிபு. மற்றெவ்வாறோ வெனின், ஆள்வோர் கைக் கருவியாய் அலுவற் பல புரிந்ததனாலும், ஆளும் வகையறியாப் புல்லியர் மாட்டு நாட்டாண்மையைப் பறிகொடுத்து அல்லற் பலவுழக்கும் ஒரு நாட்டாரின் அவலப் பெற்றியினாலேயும் எய்தியவேயாம். இனி, இத்தகையதொரு குருட்டுப் பேறுதானும் யார்க்கும் எய்தற்பால தொன்றன்று. நாட்டார் தம் அறியாமை யேதுவாக ஒருவன் நன்மை பெற நினைத்தல் அறிஞரால் இகழ்ந்தொதுக்கற்படுவதோடன்றி அவன்றன் பிற்காலத்தவராலும் மானக்கேடென மதிக்கப்படுவதொன்றாகும்.



அறிவே அற்றங் காக்குங் கருவியாதலின் அதனையே யாரும் விடாது கைக்கோடல் வேண்டும். இலக்கண வறிவின்றேல் பிழையற எழுதுவதின்று என்பது உறுதி; பிழையறப்பேசுதல் என்பதும் அரிதே. ஒருவனதறி வாற்றலை ஆராயப்புகும் அறிவோர் அவன்றன் பேச்சையும் எழுத்தையுமே உரைகல்லாக் கொள்வர் என்று கூறவும் வேண்டுமோ?

இலக்கண நூற் பயிற்சியோ எளிதிற் கைவருதலில்லை. கணக்கு நூலைப்போன்று இலக்கண நூற் பிரிவில் ஒரு பகுதியை யொதுக்கி யொன்றை மட்டும் பயிறல் என்பது கூடாது; நூற்பிரிவு முழுவதையுமே பயின்று முடித்தல் வேண்டும். மேலும் இலக்கணம் தொகுப்பு நூலாதலின் இயல்பாய் விளங்கக்கூடிய தொன்று மன்று. அதன் உள்ளுறை பொருள் ஒவ்வொன்றும் ஆர அமர உட்கார்ந்து தேர்ந்து உணர்ந்து தெளிதற் பாலது. ஒரு முறை இவ்வாறு உழைத்து அந்நூலைக் கற்றுவிட்டாலோ அந்நூல் வாணாள் முழுதும் உடனிருந்து உதவும் பெற்றியது. உற்றவிடத்து உதவி இன்பத்தையோ பயனையோ வன்றி யிரண்டையுமோ அஃது எளிதில் அளித்தற் காணலாம். இலக்கண அறிவே ஏனைய நூலறிவிற்கு அடிப்படை. அதுவே ஒருவன் சொல்வன்மையையும் கல்வித் திறமையும் எளிதிற் பிறர்க்கு எடுத்துக்காட்ட வல்லதாகும்.

இனி, விடாமுயற்சி என்பது தானும் எத்துறையிலும் இயல்பாக வேண்டப்படுவதாயினும் இலக்கணத்துறையில் மட்டும் அஃது இன்றியமையாது வேண்டப்படுவதாகும். "இளமையிற்கல்" என்று தமிழன்னை பணித்ததும் இலக்கண நூற்பயிற்சியைக் கருதியே போலும். இளமையிற் கற்ற விலக்கணம் எஞ்ஞான்றும் பயனுடைத்து. அஃதொக்கும்; ஆயின் நூற்பயிற்சியிற் பலர் கடைத்தேறாமற் போவதைக் கண்கூடாகக் காண்கின்றோமே எனிற் கூறுதும். கல்விப் பயிற்சியிற் கடைத்தேறாதொழிதல் பெரும்பாலும் விடாமுயற்சி யின்மையினாலேயேயன்றி மற்று அறிவாற்றலும், கற்கை அவாவும் இன்மையினாலன்று. இலக்கணப்பகுதியோ வருந்தி வருந்திக் கற்றற்பாற்று.

கற்போ சுவையற்றது; பொருளோ சிக்கலானது. கற்கக் கற்க இலக்கணநூல் உணர்ச்சியை யொழித்து அறிவைக் கலக்குவது; எனினும் எய்தற்பாலதாய ஈடற்ற பெரும் பயன் கருதி இடைவிடாது பயிறற்பாற்று. இன்றேல் கருத்தொழிந்து களை மிகுந்து வெறுப்புங் கையறவும் மீதூர இலக்கண நூல்தானும் மூடிக் கைவிடப்படும். இத்தகையதோர் நிலை யெய்தாதிருக்க வேண்டின் அந்நூற் பயிற்சியில் விரைவை மட்டுப்படுத்தி முறையாக நாடோறும் பயின்றுவரல் வேண்டும். இடையிடையே இயல்பிற் களையுணர்வு களைத்தெழுந்தோறும் அதுகாறும் உழைத்தது பயனற்றதாய்விடுமே என்பதையுன்னி விழிப்புடன் விடாது முயன்று பயிறல் வேண்டும். இலக்கண நூற் பயிலப் புகுந்த பதின்மரில் ஒன்பதின்மர் விழுக்காடு இக்களை யுணர்ச்சிக்கு இலக்காகி அந்நூற் பயிற்சியைக் கைநெகிழ விட்டிருக்கின்றனர். நாடோறுங் குறிப்பிட்ட ஓரளவு நேரம் இலக்கண நூற்படித்தல் என்று வரையறுத்துக் கோடல்வேண்டும். மூளை தானும் எஞ்ஞான்றும் ஒரே படித்தாய் இருக்கும் தன்மையதன்று. கற்கை யவாவூட்டிக் கற்றதை யேற்கும் நெகிழ்ச்சி யுடையதாய் அஃது எப்பொழுதும் இருத்தலில்லை. ஒருகாலை கிளர்ச்சி மிகுந்து சுறுசுறுப்புடன் தோன்றும்; மற்றொருகாலை மடிமிகுந்து மாழ்கித் தோற்றும். ஆனால் மடிமிகுந்த அந்நிலையில் அறிவு இடைமறித்து அம்மடியை யொழித்து பயிற்சிக்கண்செலுத்தினால் கிளர்ச்சியான நிலையை யெதிர் நோக்கி நிற்றல் வேண்டா. நாடோறும் அறிவு துணையாக மடியை மடக்கிப் பயிற்சிக்கண் முறையாக செல்லுமொருவற்குக் கிளர்ச்சிநிலை தானே யெய்தா நிற்கும். ஐந்தாறு முறைகளில் இவ்வாறு களையுணர்வைப் புறங்காணின் வெற்றியின் முதற்படி கைவந்ததெனக் கொள்ளலாம். அதுவே விடாமுயற்சிப் பழக்கத்திற் கொண்டுய்க்கும் ஏதுவுமாகும்.

இத்துணையும் இலக்கண நூற் பயிற்சியைக் குறித்து எடுத்துக் கூறியது என்னையோ வெனின் அது பஃறலைய நூற் கல்வியில் விழுமியது என்பது கருதியே தான். இலக்கணம் பயின்றானொருவன் எளிதில் தான் பலரினும் மேம்பட்டவன் என்பதை



யுணர்ந்து கொள்வான். அவ்வுணர்ச்சி தானும் அவன் மாட்டுத் தன்மதிப்பைப் பெருக்கித் தன்னம்பிக்கை யென்னும் ஒப்பற்ற உறுதுணையை நல்கி, பொய்படு பொருட் சிறப்பாளர் தம் புல்லிய ஆதரவை யிகழ்ந்தொதுக்கும் வன்மையை யளிக்க வல்லதாகும்.

---

# இளஞ்சேய்க் கொல்லி

## சிறுமலை நாட்டில் நிகழ்ந்தவை.

[திருக் கபசம் எழுதியது]

(௧௬௧-வது பக்கத் தொடர்ச்சி)

இதற்குள் அரசன் இளஞ்சேய்க் கொல்லியைப் பிறருக்குந் தன் மனைவிக்கும் அறிமுகப்படுத்தி வைத்து, அவனைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து பேச வாரம்பித்தான். வேந்தன் கூறிய தரசியின் காதி லேறவில்லை; இளஞ்சேய்க் கொல்லியின்மே லவள் கண்ணுங் கருத்து மூன்றின. இளங்கோமகன், அரசியுட னுரையாடி முகமன் கூறாது அமைதியாய் நின்றான். இதை யவள் விரும்பவில்லை யாயினும், இளஞ்சேய்க் கொல்லியைப்பற்றி வெறுப்படையாது, அவனைக் குறித்து நினைவி லாழ்ந்தாள்.

அரசனு மிளஞ்சேய்க் கொல்லியு மந்தப்புரத்தை விட்டு நீங்குமுன், வேந்தன் மனைவிக்கு அவ்விளமகன்மேற் பெருங் காதல் பிறந்தது. நாட்கள் பல கடந்தன; இளஞ்சேய்க் கொல்லியுடன் பேசி மகிழ அரசிக்கு வேட்கை மிகுந்ததாயினும், அரசனுடன் நெருங்கிப் பழகியதுபோல், இளஞ்சேய்க் கொல்லி அரசியுடன் அளவளாவியிருக்க விரும்பவில்லை. இளங்கோமகனின் நன்மையைக் கருதி யரசி யிடைவிடாது தன்னாலியன்றவற்றை யெல்லாஞ் செய்து வந்தாள். அரசனுமவ்வாறே செய்தான். தனக்காக அவர்க ளெடுத்துக்கொண்ட கவலையை நினைந்து இளஞ்சேய்க் கொல்லி மிக நன்றி யறிதலோடு நடந்து கொண்டான்.

தன்னந்தனியனாய்த் தப்பியோடி வந்த தோன்றல், இப்

பொழுது பழைய செய்திகளையு மவற்றைப்பற்றிய நினைவுகளையு
மறந்து, ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கினான். துணையி
லியாயவன் சிறுமலை நாட்டிற்கு வந்த அஞ்ஞான்று நன்மொழி
கள் கூறித் தன்னை வரவேற்றுத் தனது நலங்கருதிப் பல செய்த
வரம்பனின் பொருட்டு, இளஞ்சேய்க் கொல்லி பல வேலைகளி
லிறங்கினான். சிறுமலை நாட்டின் வளம் பெருகவும், பசி, பிணி,
பகையால் வருந் துன்பங்கள் குறையவும், அவன் பாடுபட்டுழைத்
தான். அவனெடுத்த கருமங்களெல்லாம் எளிதில் நிறைவேறின.
கருமங்களைச் செய்து முடிப்பதி லவன் சாலத் திறமையுடன்
நடந்து கொண்டதாலும், இனிமையுடன் பேசுகின்றவனாகவும்
அன்பு நிறைந்தவனாகவும் விளங்கியதாலும் அந்நாட்டில் தலைமை
பெற்றவர்களிற் பலர் அவனுக்கு நெருங்கிய நண்பரானார்கள்.
இதன் பயனாக, போர்புரிவதிலும் சமாதானஞ் செய்வதிலும்
இவையொத்த வின்னும் பல காரியங்களிலும், அடிக்கடி வேந்
தன் இளஞ்சேய்க் கொல்லியி னுதவியை வேண்டிநின்றான்.
இவனும், பல காவதங்களுக் கப்பாலுள்ள வேறு நாடுகளுக்கு
அவ்வப்போது விரைந்து சென்று, அரசு முறையிற் சிக்கலான
பல காரியங்களைச் செய்து முடித்தான். இவ்வாறு நகரத்தை
விட்டு வெளியே சென்று வேலையி லாழ்ந்திருப்பதே அவனுடைய
வழக்கமாயிற்று. எதற்கெனின், அரண்மனையி லவனிருக்கும்
போதெல்லாம் வரம்பன் மனைவி அவனை நாடி வந்து, நனி
யினிய மொழிபகர்ந்து, அவனைத் தன் வலையிலகப்படுத்த முயன்
றாள். அரசி விரும்பிய வகையில் தான் நடந்து கொள்ள முடியா
தென்று எவ்வளவு தெளிவா யவன் காட்ட முயன்றானோ, அவ்
வளவுக் கதிகமா யவ ளவனுக்குக் காதலூட்ட முயன்றாள். ஒரு
நாள் அரசியுட னவன் தனியாயிருக்க நேர்ந்தபோது, அவள
வனை யணுகி, "உன்னை என்பாலிழுப்பதற்கு நானெவ்வளவு
முயன்றும், நீ சிறிதும் என்மே லிரங்கவில்லை. என்னையொரு
பொருளாக மதியாது, என் காதலையு மிகழ்கின்றாய். இதனால்
வரும் பயனை நீ யறியாய்," என்று மிக வெகுண்டு உரை பகர்ந்
தாள். இப்பேச்சைக் கேட்ட இளஞ்சேய்க் கொல்லி, மிகவு
நாணி வெளியே வந்து, அவளுடைய தகாத நடக்கையை



எண்ணி நெஞ்சு புண்ணாகி, மறுநாள் தான் நகரத்தினின்றும்
புறப்பட்டு நெடுந்தூரஞ் சென்று போர் செய்யப்போவதை
யுன்னி யொருவாறு மனத்தை யாற்றிக்கொண்டான். தான்
செய்யப்போகும் போர் முடிவதற்குக் குறைந்தது நாலைந்து
திங்களாகு மாதலால், அதுவரை யரசியின் சூழ்ச்சிகளிலிருந்து
விடுதலை பெற்றிருக்கலாமென்று அவன் மகிழ்ந்தான்.

மறுநாளே யவன் போர் முனைக்குப் புறப்பட்டுச் சென்
றான். தனது கூரிய அறிவினாற்றலானு மாண்மையினானு மிளஞ்
சேய்க் கொல்லி எளிதில் தனது எதிரிகளை முதுகுகாட்டி
யோடச் செய்து, சின்னாளில் மீண்டுந் தலைநகரந் திரும்பினான்.
வெற்றியுடன் திரும்பிய வீரமகனின் வரவுகேட்டு, நகரத்து
மக்களெல்லா மொன்று திரண்டு வெளிக்கிளம்பி, அதிக ஆர்ப்
பரிப்புடனு மலங்காரத்துடனு மவனை நகரத்திற் கழைத்து
வந்தார்கள். அரசனு மெதிர்கொண்டு சென்று, அன்பு
ததும்புகின்ற உளத்துட னிளஞ்சேய்க் கொல்லியை மார்போ
டணைத்து வாழ்த்தி, யாவருமறிய அவனைத் தன் மகனென்
றுந் தனக்குப்பின் னரசு செய்ய வுரிமை யுடையவனென்றுங்
கொண்டாடினான். இங்ஙன மன்னனருகில் வர, நகர மக்கள்
புடைசூழ, இளஞ்சேய்க் கொல்லி நகரத்துட் புகுந்து, அரண்
மனையை யணுகினான். அப்பொழுது அவன் வேந்தனை நோக்கி
"மன்னர் பெரும, தங்கள் தேவியுந் தங்களைப் போன்றே, உடல்
நலமும் உளவமைதியும் பெற்று வாழ்கின்றனரோ?" என வின
வினான். இதற்கு விடைகூறப் புகுந்த மன்னன், அரசியைப்
போல் சுகத்தை யனுபவிப்பவ ரெவருமில்லை என்றும், கவலை
என்பது அரசியின் மனத்திற் புகுவதில்லை என்றும், இளஞ்
சேய்க் கொல்லியுந் தானும் அரசியைப்போல் வருத்தமின்றி
நாட் கழித்தால் நன்றா யிருக்குமென்றும் மொழிந்தான்.

இளஞ்சேய்க் கொல்லியுந் தானும் இன்னலின்றி வாழ்க்கை
நடத்தவேண்டுமென்று வேந்தன் கொண்ட விருப்பம், அவன்
எதிர்பாராத வகையில், வீணாய்ப் போயிற்று. வேற்று நாட்டி
லிருந்து திரும்பிவந்த இளஞ்சேய்க் கொல்லி, அமைதியுட

னிலைப்பாறி இன்பத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டியதிருக்க அவ னரசியி னடங்காத கோபத்திற் கிலக்காகி, மிகவு மின்னலுற்றுத் தவிக்கவேண்டியதாயிற்று. பற்றி எரிகின்ற சினத்தை உள்ளடக்கி வைத்திருந்த கோமகள், தன்மீது இளஞ்சேய்க் கொல்லிக்குக் காதலுண்டாகும்படி இறுதியாக ஒரு பெருமுயற்சி செய்வேனென்று துணிந்தாள். அங்ஙனமே அவள் சென்று, அவன் தன்னெண்ணத்திற் கிசையுமாறு எவ்வளவோ தூண்டிப் பார்த்தும் அவ னிணங்காதவனாய் நிற்க, அணைகடந்த வெள்ளம்போற் பொங்கி யெழுகின்ற வெகுளியுடன் வெளியே வந்து, எந்தவகையி லவன்மீ தொரு பெருங் குற்றஞ் சுமத்திப் பழி வாங்கலாமென்று வகைதேடினாள்.

இளந்தென்றல் வீசுமொரு மாலைப்பொழுதில் அவள் வேந்தனிடம் வந்து, இளஞ்சேய்க் கொல்லி மிகக் கொடிய பாதகனென்றும், படிற்றொழுக்கத்தால் வேந்தனுக்கு நண்பனாய் நடிப்பவனென்றும், தனது கற்பை யழிக்க வழி பார்த்தானென்றும், இத்தகைய இழிதன்மையுடையவனை வேந்தன் நண்பனாக வைத்திருப்பது அடாததென்றும் கோபித்துக் கூறினாள். அவள் சொன்னதி லணுவளவு முண்மையில்லை யெனினும், இளஞ்சேய்க் கொல்லியின்மீ தவள் கோபங் கொள்வதற்குக் காரண முண்டென்பதை யறியாத வேந்தன், அவளுடைய அழுகையையுஞ் சினத்தையுங் கண்டு மயங்கி, அவள் கூறியவெல்லாஞ் சத்தியமென் றெளிதில் நம்பினான்.

இவ்வாறு கூறிய வரசி தன்னைவிட்டுப் போனபின், இளஞ்சேய்க் கொல்லியின்மே லவள் சாட்டிய குற்றத்தைப்பற்றி மன்னன் யோசிக்கத் தொடங்கி என்ன செய்வதென்றறியாத நிலைமையிலிருந்தான். அவனுக்குக் கூரிய அறிவும், ஐயங் கொண்டு ஆராயப் புகுந்து தெளிவடையுந் தன்மையு மிருந்திருக்குமாயின், அரசி கூறியத னுண்மையை யறிவதற்கு வேண்டிய வழிகளை யவன் தேடியிருப்பான். அத்தன்மை யவனுக்கில்லை யாதலின், உண்மை யின்னதென்றறிய யாதொரு முயற்சியுமவனெடுத்துக் கொள்ளவில்லை. இராணி பொய் சொல்லக் கூடியவ



ளென்பதையும் மன்னன் மறந்தான். எப்படி இளஞ்சேய்க் கொல்லியைத் தண்டிப்பது என்ற நினைவு அரசனை மிகவும் வருத்திற்று. தனது நாட்டை விட்டு இளஞ்சேய்க் கொல்லியை அப்புறப்படுத்தினால், அவனுதவியின்றித் தானென்ன செய்யக் கூடுமென்ற திகைப்பு மன்னனுக் குண்டாயிற்று. இங்ஙனமாயினும், இளஞ்சேய்க் கொல்லியின் முகத்தில் தான் விழிப்பதில்லை யென்றும், சிறுமலைநாட்டி னெல்லைக்குள் அவனைக் கொலை செய்வதில்லை என்று மரச னுறுதி செய்து கொண்டான். ஆனால் தனக்குப் பேருதவி செய்த இளஞ்சேய்க் கொல்லியின்மேல் எங்ஙனந் தண்டனை விதிப்பது? அவனை எங்கு அனுப்புவது? என்ற கேள்விகளுக் கொரு விடைதேடி மன்னன் கடைசியிலொரு முடிபிற்கு வந்தான். தனது மனைவியின் தாய்நாடாகிய ஈழ நாட்டில் அவளது தந்தையாகிய ஒப்பிலான் அரசுபுரிந்து வந்தான். இளஞ்சேய்க் கொல்லி செய்த பெரிய பாவத்திற்காக அவ னந்த ஒப்பிலான் நாட்டிற் சென்று மாள்வதே தகுதி யென்று வேந்தனுக்குத் தோன்றிற்று. சிறுமலை நாட்டின் துறைமுகத்திலொரு நாவாய் அன்று வந்து தங்கிற்று. அன்று காலையில்தான் வரம்பன் அக் கப்பலுக்குச் சென்று, மாலுமிகளின் தலைவனைப் பார்த்து, கப்பலோட்டிகளுக்குத் தான் கொடுக்கவேண்டிய பணத்தையும் அதற்குமேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிய தனது உத்தரவையும், ஒரு ஆள் மூலமாக வனுப்புவதாகச் சொல்லி யிருந்தான். இச் செய்திகள் தனது ஞாபகத்திற்கு வர, துறைமுகத்திலுள்ள கப்பலிலேயே இளஞ்சேய்க் கொல்லியை ஏற்றி, ஈழத்திற்போய் அவன் சாகும்படி யனுப்புவது நன்றென்று அரசன் நிச்சயித்துப் பின் வருமாறு எழுதலானான் :—

"எனது மகனென்று நான் பன்முறை பாராட்டிய விளஞ்சேய்க் கொல்லிக் கெழுதுவது :—

"பொழுது விடிவதற்குமுன் நீ ஈழநாட்டிற்குப் புறப்படவேண்டும். இஃதுடனனுப்பும் மோதிரத்தையும் இரண்டு பைகள் நிறையக் கட்டியிருக்கும் பொன்னையும் நமது துறை

முகத்திலிருந் தின்று புறப்பட விருக்குங் கப்பலின் தலைவனிடம் நீ கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். நீயுங் கப்பலேறி ஈழத்திற்குச் சென்று அந்நாட்டிற் செங்கோற் செலுத்தும் ஒப் பிலானைக் கண்டு, இக்கடிதத்துட னனுப்புஞ் சித்திரப் பெட் டியை யவனிடங் கொடுக்கவேண்டும். இஃதன்றி, இப்பெட்டி யைத் திறக்கக்கூடிய சாவிக ளிரண்டில், ஒன்று அவரிடமும், மற்றொன்று என்னிடமு மிருக்கிற தென்பதை நீ அவருக்கு ஞாபக மூட்டுவாயாக. பெட்டிக்குள் மிக முக்கியமான கடித மொன்றிருக்கிறது.

"இளஞ்சேய்க் கொல்லி, நீ, போய் வருக. புறப்படுமுன் நீ என்னை வந்து பார்த்து வழியனுப்பிக்கொள்ளவேண்டிய அவ சியமில்லை. இதற்குப் பின் ஒருவரை யொருவர் நாம் காண்போ மென் றெனக்குத் தோன்றவில்லை. உலகில் நீ உயிருடனிருக்கும் நாள் கொஞ்சமா யிருக்கலாம். என்ன நேரிட்டாலும், நீயும் ஊழைப் பகைத்து அறிவற்ற தன்மையில் நடந்து கொள்ள மாட்டா யென்றும், உன்னை நேசித்து உனக்காகக் கவலைப்பட்ட வென்மீது பகைமை பாராட்டமாட்டா யென்றும் நம்புகி றேன். போய்வருவாயாக.

வரம்பன்."

இஃதுட னரசன் மற்றொரு கடிதமுமெழுதி, அதை முன் குறித்த சித்திரப் பெட்டியுள் வைத்துப் பூட்டி, நம்பத்தகுந்த ஒருவனிடங் கடிதத்தையுஞ் சித்திரப் பெட்டியையும் மோதிரத் தையு மிரண்டு பைநிறைந்த பொன்னையுங் கொடுத்து, இவற்றை இளஞ்சேய்க் கொல்லிபா லுடனே சேர்க்குமாறு கட்டளையிட் டான். இக்கட்டளையைப் பெற்றவன் தூங்காது விழித்திருந்த இளஞ்சேய்க் கொல்லியிடம் விரைந்து சென்று வேந்தனிட மிருந்து தான் பெற்றுக்கொண்டவற்றை யவனிடங் கொடுத் தான். மன்னன் விடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்த இளஞ்சேய்க் கொல்லி, அதன் பொருளின்ன தென்றறியாமல் மயங்கிநின்று, இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப வாசித் தான். அதன்பின் அவனுக்குச் சிறிது தெளிவு பிறந்தது.



எங்ஙனமாகவோ அரசனுக்குத் தன்மீது எரிவு தோன்றி யிக் கடித மெழுதப்பட்டிருக்கவேண்டு மென்று அவனுக்கு நன்கு தெரிந்தது. அரசனது மனைவி, தன்மீது பொல்லாத பொய்க் கதைகளைக் கூறியதன் காரணமாக இக்கடிதம் வரையப்பட்ட தென்பதை யவனறியவில்லை. ஆதலின், தன்னை மகனென்று கொண்டாடிக் களித்த வேந்தன் திடீரென்று தன்னை நாட்டை விட்டேகும்படி ஏவியது யாதுபற்றி என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். குற்றமொன்று மறியாத தன்னை இவ்வாறு நடத்துவது நெறியற்ற செய்கையாகு மென்று நேரே யவனிடஞ் சென்று விளக்கிக்காட்டவேண்டுமென்று முதலில் இளஞ்சேய்க்கொல்லி கருதினான். இவ் விஷயத்தைப் பற்றி அமைதியாய்ச் சற்று ஆலோசித்தபின் இதுவுந் தனது நன் மைக்கென்றே நடந்திருக்கவேண்டுமென் றவனுக்குத் தோன் றிற்று. தானறியாத ஓராபத்தினின்றுந் தன்னை தப்புவிக்கும் பொருட்டு ஒருவேளை மன்ன னித்தகைய கடிதத்தைத் தனக்கு வரைந்திருக்கலாம். அங்ஙனமாயின், கடிதத்திற் றனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுவதே நலமாகும். அவ்வாறன்றி, தன் மீது பிறந்த வெறுப்பின் காரணமாக வேந்த னிவ்வாறு செய் திருப்பானாயின், அவன் முன் சென்று வழக்காடுவதாற் பிறக் கக் கூடிய பயனொன்றுமில்லை. தனது குற்றமின்மையை யாவரு மறிய வெடுத்துக்காட்டுதற் கிப்பொழுது முடியா விட்டாலும், எப்பொழுதாகிலு மொருநாள் உண்மை வெளிப்படுதல் உறுதி என்று கருதி, வேந்தன் கட்டளையை நிறைவேற்றத் தீர்மானஞ் செய்த இளஞ்சேய்க் கொல்லி உடனே கடற்கரைக்குப் புறப் பட்டான்.

துறைமுகத்திலுள்ள கப்பலை நண்ணி, வேந்தன் கொடுத்த பொன்னையும் மோதிரத்தையும் மாலுமிகளின் தலைவனுக் களித்து விட்டு, அமைதியாகக் கப்பலி னொருபுறத்தி லிளஞ்சேய்க் கொல்லி யமர்ந்தான். சிறிது பொழுதிற் கப்பல் புறப்பட்டுப் பாய்மரங்களில் வந்து மோதிய காற்றால் தள்ளுண்டு விரிகடலிற் பாய்ந்தோடிற்று. சிறுமலை நாட்டின் தலைநகரத்தில் வேந்த னொருவனே இளஞ்சேய்க் கொல்லிக்குப் பகைஞனான். சிறு

மலை நாட்டிற்குத் தான் தனியனாய் வந்து சேர்ந்ததையும், வரம்
பன் தனக்குச் செய்த நன்றியையும், அவனோடு பலநாள் தானி
னிது வாழ்ந்ததையு நினைத்து இளஞ்சேய்க் கொல்லி இரங்கி
னான்.

சிறுமலை நாட்டு வேந்தன், தனக்கினிய நண்பனைப் பல
நாளிருந்து அரிய ஊழியங்கள் செய்த கோமகனை வேறொரு நாட்
டிற் கனுப்பிவிட நேர்ந்ததைச் சில வேளைகளில் நினைந்து மிகவும்
வருத்தமுற்றான். இளஞ்சேய்க் கொல்லியைப் போல் உண்மை
யாய் உழைப்பவனும் நம்பிக்கை வைக்கத் தகுந்தவனுமான
தோழனெவனு மகப்படானென்பது நாள் செல்லச் செல்ல,
வேந்தனுக்கு மிகத் தெளிவாய் விளங்கிற்று. அரசனது நிலை
இவ்வாறாக, அரசியின் ஸ்திதி எத்தகையதென்று பார்ப்போம்.
உண்மையாகவே இளஞ்சேய்க் கொல்லி பெரிய குற்றத்திற்
காளானானென்று அரசன் நம்பியதால், அவனதிகமாய் வருந்த
வில்லை. அரசி யவ்விதந் தன்மனத்தை யாற்றிக் கொள்ளவிட
வில்லை. ஒரு குற்றமுமறியாத இளஞ்சேய்க் கொல்லியின்மீது
பெரும்பழி சுமத்தி, அவன் கடல் கடந்து சென்று வேறு
நாடடைந்து தூரதேசத்திற் போய்த் துன்புற வைத்ததை எண்
ணுந்தோறும் ஊசியிறங்குவதுபோ லோருணர்ச்சி அவளுள்ளத்
திற் றோன்றிற்று. உயிரை வைத்துக் கொண்டிருப்பதே யவ
ளுக்குத் தாங்க முடியாச் சுமையாயிற்று. இளஞ்சேய்க் கொல்லி
சிறுமலை நாட்டைவிட்டுச் சென்ற சின்னாட் கழித்து அரசி
யொருநா ளரண்மனையிலிருந்து திடீரென்று காணமற் போனாள்.
அவளுடைய சேடியரும் பிறரும், அவள் சின்னாளாய் ஏக்கத்தி
லாழ்ந்து ஒருவருடனு முரையாடாது நடந்து திரிந்த தோட்டங்
களிலும் வேறிடங்களிலு மெங்கணுந் தேடிப்பார்த்தனர். ஆனா
லிம்முறை யவள் தோட்டத்தையு மரண்மனையையுங் கடந்தப்
பாற் சென்றனள். ஓரிடத்திலுள்ள முட் செடியில் அரசி யணிந்
திருந்த பட்டாடையிலுள்ள சில நூல்கள் தொங்குவதுகொண்டு,
அச்செடியைக் கடந்து கோமகள் வெளியே போயிருக்க வேண்டு
மென்று எளிதிலெவருங் காணக்கிடந்ததாயினும், அவ்விடத்தை
விட் டவ ளெங்கு சென்றாளென்பது விளங்கவில்லை. அரசனா



லனுப்பப்பட்ட மனிதர் நாடெங்குஞ் சென்று, அரசியைப்பற்
றியசெய்தி யாதாயினுங் கிடைக்குமா வென்று பார்த்தார்கள்.
எங்ஙன மரசி மறைந்து போனாளென்று ஒருவராலுஞ் சொல்லக்
கூடவில்லை. தங்களரசி யினித் திரும்பிவாராளென்று சிறுமலை
நாட்டு மக்களுணர்ந்தனர். அவர்களிதற்காக வருந்தவில்லை;
அவளை யிழந்து விட்டதற்காக வரசனுந் தாங்கொணாத் துயரி
லாழ்ந்து போகவில்லை.

வரம்பன் மனைவி எங்ஙனம் மறைந்தாளென்ற செய்தி, அந்
நாட்டிலுள்ள மக்களிருவருக்கே யன்றி வேறெவர்க்குந் தெரி
யாது. இவர்கள் யாரெனில், ஒரு வலைஞனு மவன் மனைவியுமே.
அரசி மறைந்துபோன மறுநாள் வலைஞன் தன் மனைவியிடம்
வந்து, தான் கண்ட ஒரு செய்தியைக் கூறத் தொடங்கினான்:—

“மனைவியே, நேற்றிரவு யான் கண்ட காட்சி யொன்றை
யுனக்குச் சொல்லுகிறேன். நேற்றிரவு நான் கடலிற் சென்று
வலைவீசிப் பிடித்த மீனைச் சுமந்து கொண்டு நமது தலைநகருக்
குக் கடலோரமாகவே நடந்து சென்றேன். வழியில் நமது
ஊருக்கு அடுத்திருக்குங் குன்றின் சாரலிலுள்ள காட்டிற் பாதி
தூரங்கடந்து நான் போகையில் வியக்கத்தகுந்த ஒரு நிகழ்ச்சி
யைக் கண்டேன். குன்றின் செங்குத்தான பாகத்தில் நின்று
கொண்டு கீழேயிருக்கின்ற கடலை யுற்று நோக்கிய ஓருருவ
மெனக்குத் தெரிந்தது. அப்பொழு திருட்டாயிருந்தாலும்
அவ்வுருவமொரு பெண்ணாய்த்தா னிருக்கவேண்டுமென்றெனக்
குத் தோன்றிற்று. ஆயினும், அப்பெண் தனது நிலைமையை
நினைந்து வருந்தி வாய்விட்டுப் புலம்பாதிருந்தால், அது
யாரென்று நானறிந்துகொள்ள முடியாது போயிருக்கும். அவ்
வுருவம் புலம்பிய புலம்பலிலிருந்து அது நமது வேந்தனது
மனைவியாய்த்தானிருக்கவேண்டு மென்று நன்றாயறிந்து கொண்
டேன். மக்களாய்ப் பிறந்தவரில் தன்னைப்போல் அல்லல்பட்
டவரெவருமில்லை யென்றும், ஒரு பாவமுமறியாத ஒருவனுக்
குத் தானிழைத்த பெருந்தீங்கினால் தனக்கு மதிமயக்கமுண்டா
யிற்றென்றும், அரசி சொல்வ தென்காதில் விழுந்தது. தூக்
குப் போட்டுக்கொள்ளும் பொருட்டு, அரசி தன் அரையிலிருந்த

கச்சையை யவிழ்த்து, அதை யொரு மரத்திற் கட்டித் தொங்க விட்டிருப்பதை நான் பார்த்தேன். அவள் செய்ய நினைத்த செய்தியை நான் விரைந்து சென்று தடுப்பதற்குமுன் இராணி யின் முடிவு வேறொரு வகையில் நிகழ்ந்து விட்டது. மனத்தைத் துடிக்கச் செய்யுமொரு பெருங்கூச்சலுடன் அரசன் மனைவி சரேலென்று கீழே கடலிற் குதித்தாள். இதைக் கண்டு நானயர்ந்து நின்றுவிட்டேன். வேந்தன் மனைவிக் கித்தகைய பயங்கர முடிவு வரவேண்டிய காரணமென்னவென் றெனக்கு விளங்கவில்லை.

“இதன் பின் என்ன செய்வதென்று நான் யோசிக்கலானேன். ஒரு வழியுமெனக்குத் தோன்றவில்லை. உன்னுடைய யோசனை என்ன? இதோ பார், மரத்திலிருந்து தொங்கிய கச்சையை நான் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். இதை மன்னனிடங்கொண்டு போய்க் கொடுத்து நான் கண்டவற்றை யெல்லா மவனிட மெடுத்துரைக்கச் சொல்லுகிறாயா? அல்லது ஒன்றும் பேசாது இக்கச்சையை யாருக்காகிலும் விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாமா? என்ன செய்யச் சொல்லுகிறாய்?” என்று செம்படவன் கேட்க,

“வேண்டாம், வேண்டாம். அரசனிட மிதைக்கொண்டு போகவும் வேண்டாம், இதை விற்கவும் வேண்டாம். சொல்லொணாத் துன்பத்தில் மூழ்கியிருந்த வரசியின் கச்சையை விற்றுக் கொஞ்சம் பணந்தேடிக்கொள்வதால் நமக்குத் தீமை வந்து நேருமேயன்றி நன்மை வராது. இன்னவகையி லரசி யிறந்தாளென்று வேந்தனுக் குரைப்பதால் பிரயோஜனமொன்றுமில்லை. குன்றில் நின்றுகொண்டிருந்த வரசியைக் கடலில் விழாதபடி தடுக்காமற்போனது உன் குற்றமாகு மென்று அரசன் தண்டித்தாலுந் தண்டிக்கலாம். ஆதலின் நீ படகிலேறிக் கடலிற் சென்று ஒரு கல்லைக் கட்டி இந்தக்கச்சையை ஆழத்திலெறிந்து விடு. அரசி மாண்ட விதத்தைக் குறித்து நீயுநானு மினி யொரு வார்த்தையும் பேசலாகாது,” என்று அவன் மனைவி பதிலிறுத்தாள்.

மக்களுக்குப் பல நலத்தைச் செய்வாளென்று யாவரு



மெதிர்பார்க்கக்கூடிய வழகிய விளம்பெண்ணாய், ஈழ நாட்டிலிருந்து பலவாண்டுகளுக்கு முன் சிறுமலை நாட்டிற்குவந்த வரசன் மனைவியின் தற்கொலை மேற்குறித்த செம்படவர்க்கன்றி வேறெவர்க்கும் வெளியாகவில்லை. இது நிற்க, அரசியால் நீங்கிழைக்கப்பெற்ற இளங்கோமகனுக்கு ஈழ நாட்டில் யாது நேர்ந்ததென்று பார்ப்போம்.

---

# திருவாசக வாக்கியங்கள்

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் எம். ஏ.]

(சிலம்பு ௯, ௩௩௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 38. திருவேசறவு

1. இரும்புதரு மனத்தேனை.
2. பொற்றவிசு நாய்க்கிடுமாறு.
3. நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்.

## 39. திருப்புலம்பல்

1. உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
2. கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

## 40. குலாப்பத்து.

ஓடுங் கவந்தியுமே உறவு.

## 41. அற்புதப் பத்து.

1. மண்ணிடை வாழ்வெனும் ஆழி.
2. அடித்தடித்து வக்காரமுன் தீற்றிய
3. ஊசலாட்டு மிவ்வுட லுயிராயின
4. உணர்வார்க் குணர்வரியவன்
5. பொச்சையான இப்பிறவி.
6. புழுத்தலை நாய்

## 42. சென்னிப் பத்து.

1. மூவரானு மறியொணாத முதலாய ஆனந்தமூர்த்தி.
2. அன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்.
3. காயத்துள்ளமு தூறவூற நீ கண்டுகொள்.

### 43. திருவார்த்தை

சேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த
இடப்பறிவார் எம்பிரானுவாரே.

### 44. எண்ணப் பதிகம்.

1. முத்தனையானே மணியனையானே.
2. காணவு நாணுவனே.
3. பாற்றிரு நீறு.

### 45. யாத்திரைப் பத்து.

1. மிக்க எல்லாம் வேண்டா.
2. யாம்ஆர் எமதுஆர் பாசம்ஆர் என்னமாயம்.
3. வீடுமின் வெகுளி.
4. பிற்பானின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன் பெருமான்.

### 46. திருப்படை யெழுச்சி.

ஞானவாள் ஏந்தும் ஐயர்.

### 47. திருவெண்பா.

1. செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதேன்.
2. வருந் துயரந் தீர்க்கு மருந்து.
3. யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்.

### 48. பண்டாய நான்மறை.

1. காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்.
2. நாட்டிற் பரிப் பாகன்.

### 49. திருப்படையாட்சி.

1. கன்றை நினைந்தெழு தாயெனவந்த கணக்கு.
2 இந்திர ஞால இடர்ப் பிறவி.

### 50. ஆனந்தமாலை.

1. இருந்தேன் நோய்க்கு விருந்தாயே.
2. தோலின் பாவைக் கூத்தாட்டு.

### 51. அச்சோப் பதிகம்.

1. முத்தி நெறி யறியாத மூர்க்கர்
2. சித்த மல மறுவித்துச் சிவமாக்கி
3. குறியொன்று மில்லாத கூத்தன்
4. நம்மையுமோர் பொருளாக்கி நாய்ச்சிவிகை யேற்றுவித்த.

---



# சிவஞான போதக் கருத்து

## இரண்டாவது சூத்திரம்

### மூன்றாவது அதிகாரணம்

[திரு. M. V. நெல்லையப்பபிள்ளை அவர்கள் B. A.]

(௱௪௯ - வது பக்கத் தொடர்ச்சி)

அடைந்த நுண்உடல் துன்ப உடல் (யாதனு சரீரம்) என்று கூறப்படும். இந்தத் துன்ப உடலினது பூத அணுக்கள் பருஉடற் பூத அணுக்களை விட்டுப் பிரிந்திருத்தலினால் மிக விரைவாய் அசைகின்றன (vibrate). துன்ப உடற் பூத அணுக்கள் மிக விரைவாய் அசைதலினாலும் நில உலகத்தைப்போல நிரய உலகில் வேட்ட நுகர்வுப் பொருள்கள் கிடைக்கப் பெறுமையினும் நிரய உலக வாழ்வில் உயிர் கழிபெருந் துன்பம் அடைகின்றது. உயிரானது நில உலக வாழ்வில் எத்துணை வேட்கை மிகுதி உடையதா யிருந்ததோ அத்துணை நிரய உலகில் துன்பம் நுகரும். அக்கருத்துப் பற்றியே ஔவையார் "கிட்டாதாயின் வெட்டெனமற" எனக் கூறி யருளினர். உயிர் இவ்வாறு நிரய உலகில் துன்பம் நுகருங்கால் அத்துன்பத்திற்கும், அதற்குக் காரணமான தீவினைக்குமுள்ள தொடர்பை நினைந்து இனிவரும் உலக வாழ்வில் அத்தகைய தீவினையைச் செய்யக் கூடாதென்று தனது உள்ளத்தில் முடிவு (resolution) செய்கிறது. இந்த முடிவின் பலனாக உயிரினது மனதில் தீவினையைச் செய்யாமல் அதனை விலக்கும் திறன் (power of avoiding the evil which is a negative virtue) முன்னையிருந்ததைப் பார்க்கிலும் வலுவாய் வளர்ந்து பெருகுகிறது. உயிர் நிரய உலகிலிருக்கிற காலம் அது நில உலக வாழ்விற் செய்த தீவினையின் அளவையும் கொடுமையையும் பொறுத்திருக்கிறது. உயிர் நிரய உலகிற் றுன்பம் நுகர்ந்தபின் மனஉலகினது(சுவர்லோகம்) ஒரு பிரிவாகிய துறக்க உலகை (சுவர்க்கலோகத்தை) அடைகிறது. துறக்க உலகை உயிர் அடையும்

பொழுது அவ்வுலகில்தான் நில உலக வாழ்வில் பயன் குறித்துச் செய்த அறச்செயல் (புண்ணியச் செயல்)களுக்கு ஏற்ற இன்பம் நுகர்தற்கு பூதசார உடலைப் பெறுகின்றது. இந்தப் பூதசார உடலும் நுண் உடலினது நுண்பூத அணுக்களின் சேர்க்கை மாறுதலினாலே உண்டாகின்றது. துறக்க உலக வாழ்விலுள்ள மக்கள் உயிர்களெல்லாம் ஒரே வகையான இன்பம் நுகருதலில்லை. நில உலக வாழ்வில் உயிர் பயன் குறித்து அறவினை செய்யுங்கால் அதனுடைய மனவிரிவு (mental breadth) அல்லது மனக்குறுக்கம் (mental narrowness) எந்த அளவினதாயிருந்ததோ அந்த அளவில் அது துறக்க உலகில் இன்பம் நுகரும். துறக்க உலகம் மன உலகத்தைச் சேர்ந்ததாதலின் அவ்வுலகில் உயிர் நுகரு மின்பமும் அதன் மனத்தினது விரிவையும் நலத்தினையும் பொறுத்தே யிருத்தல் இயல்பாகும். நிலஉலக வாழ்விலேயே மக்கள் உயிர் அடையும் உலக இன்பம் நாம் கண்கூடாக அறிகிறபடி அதன் மனப் பண்பைப் பொறுத்திருக்குமானால் நுண் மனஉலக வாழ்வில் அடையும் தனி இன்பம் எத்தனை மடங்கு மனப்பண்பைப் பொறுத்திருத்தல் வேண்டும்?

இவ்வாறு மக்களுயிர் துறக்க உலகில் தனது நுண்உடலில் இன்பம் நுகரும்பொழுது தான் நுகரும் இன்பத்திற்கும் அதற்குக் காரணமாயிருந்த நில உலக வாழ்வு நல்வினைக்குமுள்ள காரண காரியத் தொடர்பினை, தடிப்புத் தன்மை (material density) நீங்கிய காரணம்பற்றி எளிதாய் நினைந்து அறிதலினால், அவ்வுயிரினது மனதில் இனி நில உலக வாழ்வில் நல்வினையைச் செய்தல் வேண்டும் என்னும் கருத்து முன்னிருந்ததைப் பார்க்கிலும் வலுவடைந்து நல்வினையை நினைந்து செய்கின்ற மன அறநினைவுத்திறனும் (power of thinking what is good which is a mental faculty) நல்வினையை உணர்ந்து செய்கின்ற மன அற உணர்வுத் திறனும் (moral faculty) வளர்ந்து பெருகுகின்றன. ஆதலின் மக்கள் உயிருக்குத் துறக்க உலக வாழ்வு மேலே கூறியபடி இன்பம் நுகருகிற காலமாயிருத்தலோடு நிலஉலக வாழ்வில் சேர்த்து வைத்துக்கொண்டு வந்திருக்கிற நுகர்வுக் கருத்துப் பொருள்களுக்குத் (gathered materials of worldly experience) தக்க அளவு மன அற நினைவுத்திறனும் (mental faculty) மன அற உணர்வுத்திறனும் (moral faculty) வளர்ந்து பெருக்கம் (development) அடையும் காலமாயு மிருக்கிறது. இந்த மன அறநினைவுத்திறனும் மன அற உணர்வுத்திறனுமே பின் வரும் நிலவுலக வாழ்வு ஒழுக்கத்துக்கு அடி முதலாய் (basic source) நுண்மன உடலில் அமைகின்றன. மக்கள் உயிர் துறக்க உலகிலிருக்கிற காலம் அது பயன் குறித்து நிலஉலக வாழ்விற் செய்த அறச்செயல்களின் அளவையும் தன்மையையும் (quantity and quality) பொறுத்திருக்கிறது. மேலே கூறிய வாற்றால் உலக இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அடைய விரும்பும் மக்கள் உயிர் நிலஉலகில் வாழுங் காலத்தில் தீவினையை (பாவத்தை) விலக்கி நல்வினையை (புண்ணியத்தை)ச் செய்யும் மன நலமுடையதாயிருத்தல் எத்துணை வேண்டப்படுவது என்பது நன்கு புலனாகும்.



82. மேலே கூறியவாறு நிரய உலக வாழ்விலும் துறக்க உலக வாழ்விலும் செல்லுதற்குரிய காலங் கழிந்தபின் மக்கள் உயிர், முதல்வன் ஆணையின்வழித் தான் நுகருதற்குப் பக்குவமான நுகர்வினை (பிராரத்த வினை)க்கு ஏற்றபடி ஒரு நாட்டில் ஒரு குலத்திலுள்ள ஒரு தாயினது கருப்பப்பையைப் பரு உடலிலே தனது நுண்உடலுடன் புகுந்து வளர்ந்து உலகிலே பிறக்கின்றது. அவ்வுயிர் நிலஉலகில் நுகரும் இன்ப துன்பங்களும் அவற்றிற்குக் காரணமாய செல்வ வறுமைகளும் உயர்வு இழிவுகளும் நுகர்வினைக்குத் தக்கவாறு வரையறுக்கப்படுகின்றன. அது முன்னைப் பருஉடலை விட்டு நீங்கி இறக்கும்போது தனது மனதில் எந்த வேட்கை (இச்சை) முதன்மையாய் நிலைபெற்றிருந்ததோ அந்த வேட்கையினால் செலுத்தப்பட்டு எஞ்சி நின்ற அறவினை மறவினைகளுக்குத் தக்கதொரு பிறப்பை அடைகின்றது.

83. மக்களுயிரினது வினைமலம் பிறப்பினால் எவ்வாறு பரிபாகம் அடைகின்றது என்பது கருதுவாம். பரிபாகம்

# புதிய கழக வெளியீடுகள்

1. கடலோடிவீரன் அல்லது அமெரிக்காவைக் கண்டு பிடித்த
   கொலம்பசு வரலாறு:—
   திரு. T. S. பாலசுந்தரம் பிள்ளை எழுதியது. அணு. **6**

2. நளாயனி அல்லது நங்கையர்க்கரசி:—
   பண்டிட் திரு. A. நடராச பிள்ளையவர்கள் எழுதியது. அணு. **7**

3. பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப்பாட்டு
   நச்சினார்க்கினியருரையும் விளக்கமும் விலை அணு **10**

4. மின்சார வல்லுனர்

## தோமாஸ் ஆல்வா எடிசன்

இவர் அமெரிக்காவில் 1847-ஆம் ஆண்டில் பிறந்து இன்னும் உயிரோடிருப்பவர். பத்திரிகை விற்கும் பையனாக இருந்து பார்புகழும் பதவியைப் பெற்றவர். ஊணுறக்கமின்றி உழைத்துப் பெரும்புகழ் படைத்தவர். 'பெருமையுஞ் சிறுமையு தான்தர வருமே' என்ற [...] யார் திருமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இவரது வாழ் [...] வரலாறே.

மந்திரவாதி என்று மதிக்குமாறு மின்சார அற்புதங்களை இயற்றியவர். தந்காலத் தந்தியைப் படைத்தவரும், மின்சார விளக்குகளை உலகெங்கும் பரவச் செய்தவரும் இவரே. பேசுந் தந்தியும், கம்பியில்லாத் தந்தியும் கண்டு பிடித்தவர் இவரே. பேசுங் கருவியை முதலில் இயற்றியவரும் இன்னும் எண்ணிறந்த புதுமைகளைக் கண்டுபிடித்து உலகில் அழியாப் புகழ் படைத்தவரும் இவரே.

இவரது வாழ்க்கை வரலாற்றால் நாம் அறியற்பாலன. 'வறுமையுஞ் சிறுமையும் பெருமைக்குத் தடையாகா?' என்பதும், குன்றாத ஊக்கமும் தளர்வுபடா முயற்சியுமே வெற்றிக்குப் போகும் வழிகள்' என்பதும், 'பிறப்பன்று சிறப்பே நலந்தரும்' என்பதும், 'தாயைப் போலவே பிள்ளை' என்பதும், ஆம்.

இதனை எளிய இனிய நடையில் மொழிபெயர்த்து எழுதியவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையுடைய திரு. க. ப. சந்தோஷம் பி.ஏ., எல்.டி., அவர்களாவர்.

இவரது வரலாறு படிக்கப் படிக்க மிகவும் இன்பமாயிருக்கும் (**10—6—31**-ல்) புத்தகம் வெளிவந்து விடும். விலை ரூ. 1 4 0

குறிப்பு:—**7—6—31**-க்குள் ரூபா ஒன்று முன்பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகம் அனுப்பப்படும்.

# தமிழ்க்கடல் வெளியீடுகள்

| | ரூ. | அ |
|---|---|---|
| முதற்பாகம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மூவர் உரையுடன் | 1 | 0 |
| 2-ம் பாகம் வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிவெண்பா உரையுடன் | 1 | 0 |
| தமிழ் விடுதூது (மதுரைச் சொக்கநாதர்) உரையுடன் | 0 | 5 |
| மதுரைச் சொக்கநாதருலா (புராணத் திருமலைநாதர்) உரையுடன் | 0 | 6 |
| வண்டு விடுதூது (கச்சியப்ப முனிவர்) உரையுடன் | 0 | 8 |
| சிவகாருண்ய விளக்க வினாவிடை இலக்கண விரிந்த பொருள்களும் மேற்கோள்களும் பொதிந்து உடக்கின்றன | 1 | 0 |
| அரு[illegible] 600 பழமொழிகளும் அவற்றிற்கேற்ற தீவினைப் பழமொழிகளும் | 0 | 6 |
| கின்ற மய[illegible]காலப் புத்தகங்கள் | | |
| முதற்பாகம் விலை அணா 0-5 இரண்டாவது பாகம் | 0 | 5 |

உங்கள் உள்ளமும் செயலும் தூய்மையாக வேண்டுமானால் தமிழ் நீதி அட்டைகளை உடனே வாங்கி உங்கள் வீடுகளிலும் கல்லூரிகளிலும் தொங்கவிட்டு அலங்கரியுங்கள்.

'அறஞ்செய விரும்பு' 'இன்சொல் இயம்பு' என்பன போன்ற 25-நீதிகள், இரு கலர்களில் அச்சிட்டு, கலைக்காவினால் விளிம்பு கோர்த்த அட்டையில் ஒட்டப் பெற்றிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| தனி நீதி அட்டை விலை | ... | 0 | 2½ |
| 12. நீதி அட்டைகள் விலை | ... | 1 | 8 |
| 1. செட் 25 ,, விலை | ... | 3 | 0 |
| 1. செட் நீதித் தாள்கள் மட்டும் | ... | 0 | 12 |

குறிப்பு:—ஒரு செட்டுக்கு மேல் ஆர்டர் அனுப்புகிறவர்கட்கு ரூ. 1-க்கு 2 அணா வீதம் கமிஷன் தரப்படும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6. பவளக்காரத் தெரு, சென்னை.

Printed by A. Rangaswamy at The Progressive Printers,
2-17, Coral Merchant Street and Published by V. Subbiah for
The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd.